# ஸ்ரீராமாநுஜன் 74, 75

வருடச் சந்தா ரூ. 5.



P. B. அண்ணங்கராசாரியர் க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சி.

1955 மார்ச்சு மீ ஜய ௵ பங்குனி மீ

# ஸ்ரீராமாநுஜன் 74

சென்னை ஸத்க்ரந்தப்ராகாசந ஸபையின் மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்:—ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்

18464

| ஸம்புடம் 7 | 1955 பிப்ரவரி ஜயஸு மாசிமீ | மலர் 2 |
|---|---|---|

## இராமானுச நூற்றந்தாதி பாசுரம் 74

தேரார் மறையின்திறமென்று * மாயவன்தீயவரைக்
கூராழி கொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார்குணத் தெம்மிராமானுச னவ்வெழில்மறையில்
சேராதவரைச் சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே.

அமுதனார் தமது நூற்றந்தாதியில் எம்பெருமானாரைப் பலவகைகளாலே துதிக்குமிடத்து அவ்வகைகளுள் ஆச்சரியமானவகையொன்றைத் திருவுள்ளம்பற்றியிருக்கின்றார்; அதாவது—எம்பெருமானுக்கும் எம்பெருமானார்க்குமுள்ள நெடுவாசியைக் கூறுதலாம். எம்பெருமானைக்காட்டிலும் எம்பெருமானாரே மிகுந்த மேன்மைபெற்றவரென்று பல பாசுரங்களில் நிரூபணம் செய்துவருகின்றாரன்றோ. கீழ் * மண்மிசையோனிகள்தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுறநிற்கிலுங் காணகில்லாவுலகோர்களெல்லாம், அண்ணலிராமானுசன் வந்து தோன்றியவப்பொழுதே நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே * என்கிற நாற்பத்தோராம் பாசுரத்தில்—எம்பெருமானுடைய அவதாரங்களில் ஆகாத காரியம் எம்பெருமானாருடைய அவதாரத்தினால் மிகவெளிதாகத் தலைக்கட்டிற்று என்றார். அதாவது, * உயிரளிப்பானெந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தா யிமையோர்தலைவா! * என்கிறபடியே எம்பெருமான் பலபலயோனிகளிற் பலவகைப்பிறவி பிறந்து கண்காணவந்துநின்று உபதேசங்களாலே ஸ்வஸ்வரூபத்தைக் காட்டிக்கொடுத்தவிடத்திலும் யாரும் அவனை லக்ஷியம் பண்ணவில்லை; *அவஜாநந்தி மாம் மூடா:* [என்னை எல்லாரும் அவமதிக்கிறார்கள்] என்று தானே சொல்லிக்கொண்டு வருந்த நேர்ந்தது. ஆகவே எம்பெருமானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளின் உஜ்ஜீவனத்திற்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானாருடைய அவதாரமோவென்னில், அநாயாஸமாகப் பயன்பெற்றது. இவர்தாம் திருவவதரித்தக்ஷணத்திலேயே ஸம்ஸாரிகளான யாவரும் ஆச்சரியமான ஞானத்தைப்பெற்று உஜ்ஜீவித்தார்கள்—என்றது.

இவ்வெழுபத்திநான்காம் பாசுரத்தில் எம்பெருமானைக்காட்டிலும் எம்பெருமானுக்குண்டான ஏற்றத்தை மற்றொரு வகையாலே பேசுகிறார். எங்ஙனேயென்னில்; [தேரார்

மறையின்திறமென்று இத்யாதி.] எம்பெருமான் தனது கட்டளையான வேதங்கள் காட்டின வழியைப் பின்சென்று நடவாத கொடியவர்களைத் தனது திருவாழியைக் கொண்டு தொலைத்திடுகிறான். எம்பெருமானாரோவென்னில், அன்னவர்களைத் தொலைக்கும் விஷயத்தில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக்கொள்வதில்லை. வேதங்களைப் பிரமாணமாக வொப்புக்கொண்டு அவற்றில் அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையோ வேதத்தை அடியோடு ஒப்புக்கொள்ளாத வேதபாஹ்யர்களையோ தொலைத்தருளத் திருவுள்ளம் பற்றினாராகில், வாதப்போர் நடத்தி அதில் அப்போதப்போது திருவுள்ளத்தில் ஸ்புரிக்கின்ற நல்ல யுக்திகளைக் கொண்டே கண்டித்துவிடுவர்; இத்தகைய சக்தி எம்பெருமானுக்கில்லையென்க. .... (*)

---

# கொண்டலனையவிராமானுசன்.

மேலே விவரித்த நூற்றந்தாதிப்பாசுரத்தில் எம்பெருமானார் மேகமாகவனுஸந்திக்கப்பட்டார். ஸ்வாமிக்கு மேகத்தோடு ஸாம்யம் பலவகைகளாலுண்டு. ஸ்வாமிக்குமாத்திரமேயன்று மேகஸாம்யமுள்ளது; பொதுவாக ஆசார்யர்களெல்லார்க்குமே அதுவுண்டு; முன்னம் அதை நிரூபித்துப் பிறகு ஸ்வாமி யெம்பெருமானார்க்கு அஸாதாரணமான மேகஸாம்யத்தை ஆண்டாள் திருவுள்ளம்பற்றினவகையில் நிரூபிப்போம்.

## (ஆசார்யர்களுக்குப் பொதுவான மேகஸாம்யம்.)

1. மேகமானது உப்புக்கடலிலுள்ள க்ஷாரமான ஜலத்தையும் தான் முகந்து மிக மதுரமாக்கிப் பெய்கின்றது. அதுபோல ஆசாரியர், நால்வேதக் கடலிலுள்ளனவாய் மந்தமதிகளுக்கு துரவகாஹங்களாய் அபோக்யங்களான அர்த்தங்களைத் தங்களுடைய திருநாவீறு கொண்டு பரமபோக்யமாக்கி உபகரிப்பர்.

2. மேகமானது "உயிரளிப்பான் மாகங்களெல்லாந் திரிந்து" (திருவிருத்தம்—) என்றருளிச்செய்தபடியே லோகரக்ஷணார்த்தமாகப் பெய்யவேண்டுமிடங்களிற் சென்று பெய்வதுபோல், ஆசாரியர் "எண்டிசையும் பேர்த்தகரதான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகராமின் திரிந்து" என்கிற பூதத்தாழ்வாருடைய நியமனப்படியே "ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜனகிரிம்...........ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:" என்னும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் ஸகல க்ஷேத்ரங்களிலுமெழுந்தருளி ஆத்மோஜ்ஜீவநார்த்தமாக அர்த்த விசேஷங்களைப் பொழிவர்.

3. மேகமானது மழைபெய்து பள்ளமான விடங்களையும் நிரப்புவதுபோல ஆசாரியரும் ஸதுபதேச வ்ருஷ்டிகளைச் செய்து நீசர்களையும் உத்துங்கர்களாக்குவர்.

4. மேகமானது எப்போதும் வர்ஷியாது; காலவிசேஷங்களிலேயே வர்ஷிக்கும். இங்ஙனே ஆசாரியரும் சில ஸமயவிசேஷங்களைக் குறிக்கொண்டு அக்காலங்களிலே ஸதுபதேசவர்ஷங்களைச் செய்வர்.

5. மேகமானது ப்ராப்தகாலங்களில் பெய்யாவிடில் உலகில் பலவகைப் பீடைகள் உண்டாகின்றன. அதுபோல ஆசாரியரும் ஸமயங்களில் ஸதுபதேசங்களைச் செய்தருளாவிடில், தேஹாத்மப்ரமம் ஸ்வஸ்வாதந்த்ர்ய ப்ரமம் அந்யசேஷத்வ ப்ரமம் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய யோக்யதாப்ரமம் முதலான பல பீடைகள் தோன்றும்.

6. மேகம் எவ்வளவு வர்ஷித்தாலும் த்ருப்தியடைவது மில்லை, கைம்மாறு க்ருதுவது மில்லை. அதுபோலவே ஆசாரியரும் கைம்மாறு கருதாமல் எவ்வளவு உபதேசித்தும் த்ருப்தியடையாமலே யிருப்பர்.

7. மேகம் சில காலங்களில் சில நீர்த்துளிகளைப் பெய்து ஒய்கிறது; மற்றொருகால், போதும்போது மென்னும்படியாக அபரிமிதமாய் வர்ஷிக்கிறது. இங்ஙனமே ஆசாரியரும் சில ஸமயம் மந்த்ரோபதேசமென்று சிஷ்யர் செவியிலே சில அக்ஷரங்களைச் சொல்லி நிற்பர்; மற்றொருகால் [காலக்ஷேபக்ரந்த ப்ரவசனம் செய்யுமிடத்து] ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸபுராண உபயவேதாந்த ரஹஸ்ய ஸாரார்த்தங்களை அபரிமிதமாக வர்ஷித்து வியப்புறச் செய்வர்.

8. மேகம் வீதிகளிலே வர்ஷித்து ஜலத்தை நிஷ்ப்பலமாக்குகிறது; சிப்பிகளிற் பெய்து முத்துக்களை யுண்டாக்கி ரத்னபூஷணங்களுக்கு உதவுகிறது. இப்படியே ஆசாரியரால் சில வ்யக்திகளிடத்தில் உபதேசிக்கப்படும் அர்த்தங்கள் அநவதானத்தினாலும் விஸ்மரணத்தினாலும் அப்ரயோஜனமாகின்றன. சில மேதாவிகள் பக்கலிலோ வென்னில் விசேஷமான புஷ்டியையடைந்து ஸ்ரீவசந பூஷணம், உபதேச ரத்தினமாலை என்னும் பெயர்களால் ஆத்மாலங்கார ஹேதுக்களாகின்றன.

9. மேகம் பெய்த நீர் நதிகளிலும் தடாகங்களிலும் கிணறுகளிலும் சென்று சேர்ந்து ஸர்வோபஜீவ்யமாகின்றது; வேறிடங்களிற் சேர்ந்து ஒருவர்க்கும் கொள்ளத்தகாததாக ஆகின்றது. அதுபோலவே ஆசார்யர் ஸத்பாத்ரங்களில் வர்ஷிக்கும் அர்த்தவிசேஷங்கள் ஆசார்யபரம்பரையாய் க்ரஹித்து அநுபவிக்கத்தக்கதாயும், அபாத்ரங்களில் தந்த அர்த்தங்கள் பழுக்கக் காய்ச்சின இரும்பிலே விட்ட தண்ணீர்போல் அஸத்கல்பங்களாயும் ஆகின்றன.

10. மேகமானது "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" (பெருமாள் திருமொழி) என்கிறபடியே-பயிர், சாதகபக்ஷி முதலிய அநந்யகதிகளால் எதிர்பார்க்கப்பட்டிருந்து அவற்றுக்கு உபகாரகமாயும், "நீர்காலத்து எருக்கிலம்பழவிலைபோல் வீழ்வேனை" (நாச்சியார் திருமொழி) என்கிறபடியே எருக்கஞ் செடிகளிற் பெய்து நஷ்டத்தை விளைப்பதாயும் ஆகிறது. அதுபோல, ஆசார்யதிவ்ய ஸூக்திகளும் அநந்யகதிகளால் குதூஹலத்தோடு எதிர்பார்க்கப்பட்டு உபயோகங்கொள்ளப் படுவனவாய், பிறரிடத்திலே பெருகி "சாறுவாகமத நீறுசெய்து சமணச்செடிக்கனல் கொளுத்தியே சாக்கியக்கடலை வற்றுவித்துமிகு சாங்கியக்கிரி முறித்திட" (ஆர்த்திப் பிரபந்தம்) என்கிறபடியே அநர்த்த ஹேதுக்களாய் முடியும். இங்ஙனே மற்றும் பலவகையான உவமைப்பொருத்தங்கள் காணலாம்.

---

## இனி எம்பெருமானார்க்கு அஸாதாரணமான மேகஸாம்யம் ஆண்டாள் ஸ்ரீஸூக்தியைக்கொண்டு நிரூபிக்கப்படுகிறது.

ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் *விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!* என்கிற பதிகத்தில் திருவேங்கடமுடையான் திருவடிவாரத்திலே மேகத்தைத் தூதுவிடுகிறாள். அதில் பாசுரந்தோறும் மேகத்திற்கு இட்டிருக்கிற விசேஷணங்களை ஊன்றி நோக்குங்கால் எம்பெருமானாரையே தூதுவிடுவதாக நன்கு புலப்படுகின்றது. அது தன்னைப் பாசுரவரிசையாக விவரிக்கின்றோம்.

1. முதற் பாட்டில் *மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!* என்று விளியுள்ளது. ஆகாசத்தில் விரிக்கப்பட்ட விதானம் போன்ற மேகங்களே! என்கிறது. இதனால் எம்பெருமானாருடைய அவதாரரஹஸ்யம் தெரிவிக்கப்பட்டதாகிறது. எங்ஙனேயென்னில்; ஸ்வாமி ஆதிசேஷனுடைய அவதாரமென்பது ப்ரஸித்தம். கண்ணபிரான் வடமதுரையிலே வஸுதேவர் திருமாளிகையிலே திருவவதரித்து அந்த வஸுதேவரால் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகப் பெற்றபோது மேலே மழைத்துளி விழாதபடி திருவனந்தாழ்வான் விதானமாயிருந்து வந்ததாக இதிஹாஸமாகையாலும், திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் "தொடுத்து மேல் விதானமாய பௌவநீர ராவணை" என்று ஆதிசேஷனுடைய விதாநத்வத்தை யருளிச்செய்திருக்கையாலும் இங்கு மேலாப்பென்கிற சொல்லால் விதாநபூதனான ஆதிசேஷன் தெரிவிக்கப்பட்டு அவனுடைய அம்சபூதரான ஸ்வாமிந்! என்று விளித்ததாயிற்று. இதனால் அவதார ரஹஸ்யம் தெரிவிக்கப்பட்டவாறு.

2. இரண்டாம்பாட்டில் * மாமுத்தநிதி சொரியும் மாமுகில்காள்! * என்று மேகவிளியுள்ளது. முத்துக்களையும் நிதிகளையும் மேகம் சொரியுமாபோலே எம்பெருமானாராகிற மேகமும் முத்துப்போல் பரமசுத்தங்களான அர்த்தங்களைச் சொரிந்து, நிதிகள் ஒன்பது என்று [நவநிதியென்று] ப்ரஸித்தி பெற்றிருப்பதுபோல் ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம்; சரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம் என்று ப்ரஸித்தங்களான ஒன்பது திவ்யக்ரந்தங்களையருளிச் செய்தமையுணர்க.

3. மூன்றும்பாட்டில் * அளியத்த மேகங்காள்! * என்று மேகவிளியுள்ளது. அருள் மிகுந்த மேகங்களே! என்றபடி. எம்பெருமானார்க்கு முற்பட்ட ஆசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களென்றும், எம்பெருமானார் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யரென்றும் சொல்லப்படுவர். இவருடைய க்ருபா விசேஷத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் * ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர், ஏராரெதிராசரின்னருளால், பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று, பேசி வரம்பறுத்தார்பின் * என்கிற பாசுரத்தினாலருளிச்செய்யக் காண்கிறோம். கூரத்தாழ்வானிட்டருளின ஸ்வாமி தனியனிலும் * அஸ்மத்குரோ: பகவதோ஽ஸ்ய தயைகஸிந்தோ: * என்று ஸ்வாமிக்கு தயைகஸிந்துத்வமே நிரூபகமாகச் சொல்லப்பட்டது. ஆகவே 'அளியத்தமேகங்காள்!' என்ற விளி ஸ்வாமிக்கே பொருந்துமென்னத் தட்டில்லை.

4. நான்காம் பாட்டில் *மின்னுகத்தெழுகின்ற மேகங்காள்* என்று மேகவிளியுள்ளது. மின்னல் திகழப்பெற்ற மேகங்களே! என்றபடி. இந்த விசேஷணத்தினால் ஸ்வாமிபக்கலிலே பல விசேஷங்கள் தெரிவிக்கப்படுகின்றன. வர்ஷிக்க ஸித்தமான மேகத்தில்தான் மின்னல் மின்னும்; இதனால் எம்பெருமானாராகிற மேகம் எப்போதும் சீரிய பொருள்களை வர்ஷிக்க ஸித்தமாயிருக்கின்றமை தெரிவிக்கப்பட்டதாகிறது. அன்றியும் சிகாயஜ்ஞோபவீதங்களை நீக்கிப் போருகின்ற மதாந்தர ஸந்ந்யாஸிகளைப் போலன்றிக்கே ஸ்வாமி ஸௌதாமநீஸவர்ணஸௌவர்ண யஜ்ஞஸூத்ரம் விளங்குகின்ற திருமேனியையுடையராகையாலே, ஆகத்து—திருமேனியிலே, மின் எழுகின்ற—மின்போல் பளபளவென்று விளங்காநின்ற யஜ்ஞஸூத்ரத்தையுடைய மேகமே! என்றதாகும். யதிராஜ ஸப்ததியிலே

"காஷாயேண க்ருஹீதபீதவஸநா" என்றருளிச்செய்தபடி பீதகவாடையென்னலாம்படியான காஷாயத்தையணிந்து விளங்குகின்ற திருமேனியையுடைய ஸ்வாமியே! என்றதாகவுமாம்.

5. ஐந்தாம்பாட்டில் * வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்! * என்று மேகவிளியுள்ளது. ஆகாசத்தைக் கொள்ளைகொண்டு கிளர்ந்தெழுந்த மேகங்களே! என்கை. 'வான்' என்கிற சொல் ஆகாசத்தைச் சொல்லுவதுபோலவே பரமாகாசமான பரமபதத்தையும் சொல்லவல்லதாகையாலே பரமபதத்தைக் கையிலேகொண்டு கிளர்ந்தெழுந்த மேகம் எம்பெருமானார். ஸ்வாமி திருவடி ஸம்பந்தம்பெற்றவர்களுக்கே பரமபதப்ராப்தியுண்டென்பது * உத்யா தநஞ்ஜய விபீஷணலக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநோர் பவதா விதீர்ணம், ச்ருத்வாவரம் தததுபந்தமதாவலிப்தே * இத்யாதி ந்யாஸதிலக ஸ்ரீஸூக்தியாலும்; * காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதிபாபக்ரியஸ்ய * இத்யாதியதிராஜவிம்சதி ஸ்ரீஸூக்தியாலும் உய்த்துணரத்தக்கது.

6. ஆறும்பாட்டில் * சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்! * என்று மேகஸம்போதனமுள்ளது. வடமொழியில் ச²லம் என்ற சொல்லும், ஜலம் என்ற சொல்லும் தமிழில் சலமெனத்திரியும். இரண்டுக்கும் இங்கு விஷயமுண்டு. கபடமான காரியத்திற்கு ச²லம் என்று பெயர். யாதவப்ரகாசர் ஸ்ரீராமாநுஜரையு மழைத்துக்கொண்டு கங்காயாத்திரை புறப்பட்டதன்காரணம் குருபரம்பராப்ரபாவம் முதலியவற்றில் விசதமன்றோ; சலம் கொண்டு—யாதவப்ரகாசருடைய கபட வ்ருத்தியைத் தெரிந்துகொண்டு, கிளர்ந்தெழுந்த—விந்த்யாடவியில் நின்றும் திரும்பிப்புறப்பட்டுவந்த மேகமே! என்றபடி. ஸ்வாமி ராமாநுஜர் விலக்ஷணமான மேதையும் அந்யாத்ருசமான ப்ரதிபையும் பொலிய நின்றதனால் இவரால் அத்வைத தர்சநம் குன்றுமென்று நினைத்த யாதவப்ரகாசர் இவரை மாய்ப்பதே நலமென்று கருதி கங்கையில் மணிகர்ணிகையிலே தள்ளி மாய்ப்பதில் பாதகமிராதென்றுமெண்ணி ஸ்ரீராமாநுஜரையும் கூட்டிக்கொண்டு கங்காயாத்திரை சென்றதும், விந்த்யப்ரதேசத்திலே செல்லும்போது சில இங்கிதங்களாலே இந்த யாத்திரையின் நிமித்தமின்னதென்றுணர்ந்த கோவிந்தபட்டர் [எம்பார்] ஓரிடத்திலே ஸ்ரீராமாநுஜரோடு பின் தங்கிநின்று செய்தியை ரஹஸ்யமாக ராமாநுஜர்க்குத்தெரிவித்து அகன்றுபோம்படி ஸூசிப்பித்ததும் அங்குநின்றும் அப்போதே தனியே மீண்டதும் இதிஹாஸப்ரஸித்தமிறே.

அங்ஙனேதிரும்பிப் புறப்பட்ட ஸ்வாமி நிர்ஜனமும் நிர்ஜலமுமான நீள்காட்டிலே வழியைவிட்டுக் குறுக்கே நெடுந்தூரஞ்சென்று ஒரு மரத்தடியிலே நின்றுபார்க்க, கண்ணுக்கெட்டினவளவு * அங்கோர் நிழலில்லை நீருமில்லை * என்னும்படியான நிலைமையாய் ஒருவரும் துணையின்றிக்கே * ஆவாரார்துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் துளங்கிநின்று வழிதிகைத்து நிற்கையிலே, எம்பெருமான் இப்படிப்பட்ட பரமஸாத்விகர்களை விட்டுக்கொடுக்கமாட்டாதானொருவனாகையாலே இவர்க்குத் துணைபுரிய விரும்பி ஒரு வில்லியின் வேடம்பூண்டு வாளும் வில்லுங்கொண்டு மனைவியுடனே முன்னேவந்துதோன்ற ஸ்வாமியும் அந்த தம்பதிகளைக்கண்டு கலக்கம்தீர்ந்து உள்ளம் தேறிநின்று, நீங்கள் எங்கு நின்றும் வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? என்றுகேட்க, அதற்கு அவர்கள் 'நாங்கள் உத்தரதேசத்து ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம்; ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தை நோக்கிச் செல்லுகின்றோம் என்று சொல்ல, அதுகேட்டுமகிழ்ந்த ஸ்வாமி 'ஆகில், நானும் உங்களுடனே அவ்விடத்திற்கு வர நினைக்கிறேன், எனக்கு நீங்கள் துணையாயிருக்கவேணும்'

என்ன, நல்லது, அப்படியே யாகலாம் என்று அவர்கள் சொல்லி முன்னடியிட, ஸ்வாமியும் அவர்களைப் பின்செல்ல, விந்த்யாடவிநீங்கி மாலைப்பொழுதாக, அப்போது ஓரிடத்திலே தங்கி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நெடுந்தூரம் நடந்து சென்று பின்பு நள்ளிருளாயிருந்ததனால் மேலே வழிநடந்து செல்லமாட்டாமல் அங்கே அவர்களோடுகூடவே உபவாஸமாகத் தங்கியிருக்கையில், வில்லியின் மனைவி தாஹம் மேலிட்டுத் தண்ணீர் தண்ணீரென்று கணவனிடம் கூற, அவனும் 'இப்போது தண்ணீர் கிடைக்கவில்லையே, சிறிது போது ஆறியிரு, விடிந்தவாறே நல்ல மதுரமான தீர்த்தம் கிடைக்கும்' என்று சொல்லித் தேற்ற, அப்போது ஸ்வாமி திருவுள்ளம்நொந்து 'நமக்கு வழித்துணையான இவர்களுக்கு நாம் விடாய் தீர்க்கும்படியான தேசமாக இல்லையே!' என்கிற நிர்வேதத்தோடேயே சிறிதுபோது திருக்கண்வளர்ந்திருக்க, பின்பு கனவிருளகன்று கீழ்வானம் வெள்ளென்று காலையம்பொழுதானவாறே மூவருமெழுந்து வழிநடக்கத்தொடங்க, அந்த தம்பதிகள் அங்கே ஒரு கிணற்றங்கரையிலே அழைத்துக்கொண்டுபோய்விட்டு இவரை நோக்கி 'அருள்முகிலே! மிக விடாய்த்திருக்கின்ற எங்களுக்கு இக்கிணற்றிலிறங்கி ஒருகை அள்ளித் தீர்த்தம் தருவீராக' என்ன, ஸ்வாமியும் ஸங்கிக்ருஷ்டஜலமாயிருந்த அந்தக்கிணற்றிலே யிறங்கி இரண்டு திருக்கையாலும் தீர்த்தம் வாரியெடுத்து மூன்றுதரம்கொடுக்க அவர்களும் வாங்கி விடாய் தீரப் பருகி உருக்காட்டாதே யொளிக்க, இவரும் வெளிவந்து பார்த்தவாறே எங்குந்தேடியும் அவர்களைக் காணாமல் சுற்றிலுங்கூப்பிட்டுத் திசைகளை உற்றுப்பார்க்கையில் மாடமாளிகைகளும் கோபுரங்களும் விசேஷ ஜநஸஞ்சாரங்களும் காணப்பட, முன்னே தோன்றின சிலரை நோக்கி இவ்விடம் எவ்வூரென்றுகேட்க, 'புண்யகோடி விமானம் முன்னே தோன்றுநிற்க, எவ்வூரென்று கேட்பதென்கொல்! இது சாலைக்கிணறன்றோ, கச்சிப்பதியன்றோ' என்று அவர்கள் சொல்ல, ஸ்வாமி மிகவும் ஆச்சரியப்பட்டு வழித்துணையான வில்லிகளைப் பெருமாளும் பிராட்டியுமாக அறுதியிட்டு, என்கொலம்மான் திருவருள்கள்! என்று தலைசிய்த்து * உருக்காட்டாதே யொளிப்பாயோ! * என்று பலவாறு கூறிப்புலம்பி ஒருவாறு உள்ளந்தேறியெழுந்து சென்று தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ச் சேவித்து அப்பெருமானது திருவுள்ளத்திற்குப் பாங்காக நித்யமும் சாலைக்கிணற்றில் நின்றும் திருவாராதனத்திற்குத் தீர்த்தங் கொணர்ந்து ஸமர்ப்பித்துவந்தாரென்கிற இதிஹாஸத்தில் நோக்காக * ஜலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகிலாக ஸ்வாமியை விளித்திருப்பது மிகவும் பொருத்தமானது.

7. ஏழாம்பாட்டில் *சங்கமாகடல் கடைந்தான் தண்முகில்காள் *என்று மேகவிளியுள்ளது. கடலைக்கடைந்த பெருமானுடைய ஸம்பந்தம்பெற்றமேகமே! என்றபடி. விண்ணுளார்க்குச் சாவாமருந்தான அமுதத்தையளிக்க எம்பெருமான் கடல்கடைந்ததுபோல, மண்ணுளார்க்கு உஜ்ஜீவநமான அம்ருதத்தை "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" [திருவாய்மொழி 9-4-9] என்கிறபடியே அருளிச்செய்வதற்காக, * மறைப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற்கடைந்து துறைப்பால் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிழ்தம், கறைப்பாம்பணைப்பள்ளியானன்பரிட்டம் களிக்கருந்த, நிறைப்பான் * என்று [திருவரங்கக்கலம்பகத்தின் காப்புச்செய்யுள்] பிள்ளைப்பெருமாளையங்கார் பணித்தபடியே நால்வேதக்கடலை நம்மாழ்வார் கடைந்தார். ஆகவே இங்குச் சங்கமாகடல்கடைந்தானென்றதனால் விவக்ஷிதர் நம்மாழ்வார்; அவருடைய ஸம்பந்தம் பெற்றவர் ஸ்ரீராமாநுஜர். "பூமன்னுமாது பொருந்தியமார்பன் புகழ்மலிந்த பாமன்னுமாறனடி பணிந்துய்ந்தவன்— இராமானுசன்" என்று இதுவே நிரூபகமாகவன்றோ அமுதனார் அருளிச்செய்தது. இதைப்பற்றின விரிவுகளை நம்முடைய த்ரமிடோபநிஷத் ப்ரபாவஸர்வஸ்வத்திலே காண்பது.

8. எட்டாம்பாட்டில் * கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள்! * என்று மேக விளியுள்ளது. வர்ஷாகாலத்தில் எழுகின்ற மேகங்களே! என்பது இதன் பொருள். மேகங்களுக்கு வர்ஷாகாலத்தில் தோற்றம் இயல்பாதலால் இது ஸ்வபாவோக்தியில் சேரும். இனி எம்பெருமானரைப்பற்றிச் சொல்லுமிடத்து, வர்ஷாகாலம் எதுவென்றால், உலகில் அநுகூலமானமழை, பிரதிகூலமான மழை என்று இரண்டு மழையுண்டு. எதிர்பார்க்கப்படுகிற ஸமயத்தில் பெய்கிறமழை அநுகூலமெனப்படும். வேண்டாத காலத்திலே கெடுதலை விளைக்கின்ற மழை பிரதிகூலமெனப்படும். இங்ஙனே இரண்டு விதமான மழைகள் உலகிற் காண்பதுபோல நூல்களிலும் காண்பதுண்டு. ஸ்தோத்ர ரத்நத்தில் ஆளவந்தார் “ அவிவேகவநாந்ததிங்முகே பஹுதா ஸந்தததுஃகவர்ஷிணி। பகவந் பவதுர்திநே பதஃ ஸ்கலிதம் மாமவலோகயாச்யுத! = அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி பகவந்! பவதுர்திநே பதஸ் ஸ்கலிதம் மாமவலோக யாச்யுத!” என்கிற ச்லோகத்தினால் தெரிவித்திருப்பது பிரதிகூலமான மழை. “ த்வதீக்ஷணஸுதாஸிந்து வீசிவிக்ஷேபசீகரை:, காருண்யமாருதாநீதைச் சீதலைரபிஷிஞ்ச மாம் ” என்று திருக்கச்சிநம்பிகளும், “ ஹஸ்திசத்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபிராபஜேதா: என்று கூரத்தாழ்வானும் தெரிவித்திருப்பது அநுகூலமான மழை. இவ்விருவகை மழைகளுள் அநுகூலமானமழையை அஸ்மதாதிகளான ஆச்ரிதர்களிடத்திலே பெய்யவும், ப்ரதிகூலமான மழையை சங்கரபாஸ்கரயாதவ பாட்டப்ரபாகராதிகளிடத்திலே பெய்யவும் ஸ்வாமியாகிற மேகம் தோன்றுமென்க.

9. ஒன்பதாம் பாட்டில் * மதயானைபோலெழுந்த மாமுகில்காள்! * என்று மேக விளியுள்ளது. மேகம் மதயானைபோன்றிருக்கும். ஸ்வாமியும் அப்படிப்பட்டிருப்பர். இராமாநுச நூற்றந்தாதியில் “பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமாநுசமுனிவேழம்” என்றருளிச் செய்திருப்பதுகாண்க. பூதத்தாழ்வார் இரண்டாந்திருவந்தாதியில் “பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று, இருகணிள மூங்கில் வாங்கி—அருகிருந்ததேன் கலந்து நீட்டுந் திருவேங்கடங் கண்டீர், வான்கலந்தவண்ணன் வரை” என்றருளிச் செய்த பாசுரத்தை அனந்தாழ்வான் ஸ்வாமியெம்பெருமானார் விஷயமாக நிர்வஹித்த க்ரமமும் இங்கே அநுஸந்தேயம். ... ... *

---

# ஸ்ரீஸூக்திகளின் ஐககண்ட்யம்.

* ஸர்வஜ்ஞ லோககுருநிர்மிதம் ஆர்ய போக்யம் வந்தே ஸதா வசநபூஷணதிவ்யசாஸ்த்ரம் * என்று திவ்யசாஸ்த்ரமாகப் போற்றப்பட்ட ஸ்ரீவசநபூஷணத்தில்—“ ப்ரபத்திக்கு தேசநியமமும் காலநியமமும் ப்ரகாரநியமமும் அதிகாரி நியமமும் பலநியமுமில்லை ” என்கிற சூர்ணையினால் ப்ரபத்திக்கு தேச, கால, ப்ரகார, அதிகாரி, பலன்களின் நியமமில்லாமையை ப்ரதிஜ்ஞை பண்ணி, இவற்றுள் ப்ரகார நியதியில்லாமையை உபபாதிக்கிறவிடத்திலே “ த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று ” என்றருளிச்செய்தும், அதற்குமேலே அதிகாரி நியமமில்லாமையை உபபாதிக்கிற விடத்திலும் “ த்ரௌபதி சரணம் புகுருகையாலே ” என்றருளிச் செய்தும், அதற்குமேலே ஃபல நியமமில்லாமையை உபபாதிக்கிற விடத்திலும் “த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம் ” என்றருளிச்செய்தும் போருகை

யாலே த்ரௌபதியானவள் ரஜஸ்வலையாயிருக்கிற காலத்திலே எம்பெருமானை நோக்கி ப்ரபத்தி பண்ணினளென்றும், அந்த ப்ரபத்திக்குப்பலனாக உத்தேசிக்கப்பட்டது வஸ்த்ர மென்றும் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

இங்ஙனே யருளிச்செய்த பிள்ளை லோகாசார்யர்தாமே முமுக்ஷுப்படியில் "த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்றருளிச்செய்திருக்கக் காண்கிறோம். இதனால் த்ரௌபதிக்கு விளைந்த வஸ்த்ரவ்ருத்தியானது அவள் திருநாமம் சொன்னதற்குப் பலன் என்றதாகத் தெரியவருகிறது. இவ்விரண்டு ஸ்ரீஸூக்திகளும் பரஸ்பர விருத்தமான பொருளைத் தெரிவிப்பனபோல் காண்கிறது. 'வஸ்த்ரம் ப்ரபத்திக்குப் பலன்' என்பதாக ஸ்ரீவசநபூஷணாபிப்ராயம். அது திருநாம ஸங்கீர்த்தனத்திற்குப் பலன் என்பதாக முமுக்ஷுப்படியின் அபிப்ராயம். ப்ரபத்தியும் திருநாமஸங்கீர்த்தனமும் வெவ்வேறு காரியங்களேயொழிய ஒரேகாரியமென்னவொண்ணாது. ஆகவே, ஒரு க்ரந்தத்தில் வஸ்த்ரவ்ருத்தியை ப்ரபத்தியின் பலனாகச் சொல்லுவதும், மற்றொரு க்ரந்தத்தில் அதைத் திருநாமஸங்கீர்த்தநத்தின் பலனாகச் சொல்லுவதும் விருத்தபாஷணமாகுமன்றோ. இந்த விரோதத்தை எங்ஙனம் பரிஹரிப்பது? என்று சில பக்தர்கள் தத்வஜிஜ்ஞாஸையோடு கேட்டார்கள். பெரியார்களிடம் கேட்டிருந்த ஸமாதானத்தை அவர்களுக்கு உரைத்தோம்; அதையே இங்கு விவரிக்கிறோம்

இங்கே முக்கியமாக விசாரிக்கவேண்டிய விஷயம் ஒன்றே. அதாவது, மிக்க பெருஞ்சபை நடுவே த்ரௌபதியானவள் துச்சாஸநனால் பரிபவிக்கப்படுகிறபோது அந்த பரிபவ நிவ்ருத்தியை யுத்தேசித்துச் செய்தகாரியம் ப்ரபத்தியா? அல்லது திருநாமஸங்கீர்த்தநமா? என்பதே. ஒரு க்ரந்தத்தில் ப்ரபத்தி செய்ததாகச் சொல்லி, மற்றொரு க்ரந்தத்தில் திருநாமஸங்கீர்த்தனம் செய்ததாகச் சொல்லியிருந்தால் அதுதான் பரஸ்பர விருத்தமென்று சங்கிக்கக்கூடியதாகும். த்ரௌபதிசெய்த காரியம் ப்ரபத்திதானென்று ஸ்ரீ வசநபூஷணத்தினால் நிஸ்ஸந்தேஹமாகத் தேறியிருக்கிறது. "ரக்ஷ மாம் சரணாகதாம்" என்ற த்ரௌபதி வசனத்தாலும் இது தேறியிருக்கிறது முமுக்ஷுப்படியில் 'த்ரௌபதி ப்ரபத்தி பண்ணவில்லை, திருநாமஸங்கீர்த்தனந்தான் பண்ணினாள்' என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறதாவென்று பார்க்கவேணும். அப்படி வசநவ்யக்தியிருக்குமாகில் அப்போது விரோத சங்கைக்கு இடமுண்டாகியே தீரும். ஸ்ரீ வசநபூஷணத்தில் ஸாதித்த ப்ரபத்த்யநுஷ்டானத்தை இல்லைசெய்யும் ஸ்ரீஸூக்தியானது முமுக்ஷுப்படியில் காணப்படவில்லை. 'த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்ற விடத்திற்கு வியாக்கியான மருளிச் செய்யாநின்ற மணவாள மாமுனிகள் "* ரக்ஷ மாம் சரணாகதாம்* என்று சரணம்புகுந்த த்ரௌபதிக்கு" என்றருளிச்செய்திருப்பதை உற்று நோக்கவேணும். அநபேக்ஷிதமாக ஓரக்ஷரமும் எழுதியருளத் திருவுள்ளம் பற்றாதவரான மாமுனிகள் "சரணம் புகுந்த த்ரௌபதிக்கு" என்றெழுதியருளினதானது, அக்காலத்திலேயே சில அல்பச்ருதர்கள் ஸ்ரீவசநபூஷண ஸூக்திக்கும் முமுக்ஷுப்படி ஸூக்திக்கும் பரஸ்பர விரோத சங்கை செய்துகொண்டிருக்க, அது ஸாதாரம் அன்றாகே என்று காட்டியருள்வதற்காகவே யென்று பெரியார் பகர்வர்.

த்ரௌபதி தன்னுடைய ஆபந்நிவாரணார்த்தமாகச் செய்தது சரணாகதியே, இதில் விப்ரதிபத்தியில்லை. உபய க்ரந்தங்களும் இதில் ஏககண்டமே. இனி, வஸ்த்ரவ்ருத்

தியை சரணாகதியின் பலனாக ஒரு க்ரந்தத்திலும், நாமஸங்கீர்த்தனத்தின் பலனாக மற்றொரு க்ரந்தத்திலும் அருளிச் செய்திருப்பது விருத்தந்தானே என்கிற கேள்வி மிகவும் பல்பஜமானது. ஏனென்னில், ஊன்றிக்கேண்மின். ப்ரபத்தி சரீரத்திலே நாமஸங்கீர்த்தநமும் ஓர் உறுப்பாயிருக்கும். முமுக்ஷுப்படி த்வயப்ரகரணத்தில் “ப்ரபத்யே—பற்றுகிறேன்” என்றருளிச்செய்த வனந்தரம் “வாசிகமாகவும் காயிகமாகவும் பற்றினாலும் பேற்றுக்கு அழிவில்லை; * ஜ்ஞாநாந் மோக்ஷமாகையாலே மாநஸமாகக் கடவது” என்றருளிச் செய்து, அடுத்த சூர்ணையிலே “இம்மூன்றும் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை” என்ற விடத்து வியாக்கியானத்திலே பரந்தபடி ஸ்ரீஸூக்தியை யுதாஹரித்து அதிகாரி பூர்த்திக்குக் கரணத்ரயமும் அபேக்ஷிதமாயிருக்குமென்று மணவாளமாமுனிகள் நிகமித்தருளியுள்ளார். “அயமேவ உபாயபூதோ மம” என்று மனத்தினால் சிந்தித்து “ஸர்வரக்ஷக! த்வமேவ உபாயபூதோ மே பவ” என்று வாக்கினாலும் ப்ரார்த்தித்து, தாளுந்தடக்கையுங்கூப்பிப் பணிதல் கரணத்ரயத்தாலுமான சரணாகதியாம். கஜேந்த்ராழ்வானுடைய சரணாகதியைச் சொல்லுமிடத்து “பரமாபத மாபந்நோ மநஸாசிந்தயத் ஹரிம்” என்கையாலே அங்கு மாநஸிக ப்ரபத்திமாத்ரமே யென்று கொள்ளலாம். “நாராயணனே மணிவண்ணா நாகணையாய்! வாராய் என்னாரிடரை நீக்காய், என வெகுண்டு தீராத சீற்றத்தால் சென்று” [சிறியதிருமடல்] என்றிதுமுதலான பல ஸூக்திகளுக்கிணங்க வாசிக ப்ரபத்தியும் கஜேந்த்ராழ்வான் பக்கலிலேயுண்டென்று கொள்வதிலும் குறையில்லை.

த்ரௌபதீ விஷயத்தில் “கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்” என்கிற பகவதுக்தியையும் சேர்த்துப் பார்க்கிறபோது வாசிக ப்ரபத்தியும் நேர்ந்திருக்கிறதென்பது அறுதியிடலாகிறது. “𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌃” [பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:] என்கிற நம் பூர்வாசார்யர்களின் திவ்யஸூக்தியின்படி கஜேந்த்ராழ்வானிடத்தில் “கஜ ஆகர்ஷதே தீரே” என்னப்பட்ட ப்ரவ்ருத்தியிலிருந்து ஓய்கைதான் ப்ரபத்தியென்றும், த்ரௌபதியிடத்தில் புடவையைத் தன்கையால் இறுக்கிக்கொள்ளுதலாகிற ஸ்வப்ரவ்ருத்தியிலிருந்து ஓய்கைதான் ப்ரபத்தி யென்றும் சொல்லுவது முண்டு. வாசிககாயிகங்கள் அந்தஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியைத் தெரிவிப்பனவாகுமத்தனை. நாமஸங்கீர்த்தன மென்று தனிப்பட ஒரு உபாயமுண்டு; த்ரௌபதியிடத்தில் ப்ரஸ்தாவிக்கப்படுவது அதுவன்று; சரணாகதியின் ஓர் உறுப்பான நாமோச்சாரணமேயாயிற்று. அது காரியம் செய்தது என்று கூறுவதனால் ப்ரபத்தியிற்காட்டில் வேறொன்று காரியஞ்செய்ததாகக் கூறினதாகாது. முமுக்ஷுப்படியில் வாச்யனான எம்பெருமானிற்காட்டில் வாசகமான திருநாமத்திற்கு ப்ரபாவமருளிச் செய்யப்புகுந்த விடமாகையாலே அதற்கு அநுகுணமாக “த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே” என்றருளிச் செய்தது ரஸோக்தியில் சேருமத்தனை ‘ப்ரபத்திதானே புடவை சுரந்தது’ என்றாலுங்கூட, புடவை சுரத்தலாகிற பலப்ரதாநம் பரமசேதநனான ப்ரபத்தவ்யனுக்கு ஸம்பாவிதமாகுமே யல்லது அசேதநக்ரியாரூபமான ப்ரபத்திக்கு ஸம்பவியாதென்பதை எம்பெருமானார் தொடங்கி மணவாளமாமுனிகளீறாகவுள்ள ஸகலாசார்யர்களும் ஒருமிடறாகவருளிச் செய்யக்காண்கிறோம். * கெடலிலாயிரத்துள்ளிவைபத்தும், கெடலில் வீடு செய்யும் கிளர்வார்க்கே * தெருள்கொள்ளச் சொன்ன வோராயிரத்துளிப் பத்து, அருளுடையவன் தாளணைவிக்கும் முடித்தே * என்றிவை முதலான நிகமனப் பாசுரங்கள் பலவற்றிலும் பாசுரமே பலன்கொடுப்பதாகச் சொல்லியிருந்தாலும் பாசுரங்கேட்டு ப்ரஸந்நனா

எம்பெருமான்தான் பலன் கொடுப்ப னென்பதிலே தாற்பரிய மென்று விசதமாக வியாக்கியானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆக, ப்ரபத்தியின் பலனாக வஸ்த்ரவ்ருத்தியாயிற்று என்றதனோடு, திருநாமஞ் சொன்னதின் பலனாக வஸ்த்ரவ்ருத்தியாயிற்று என்றதனோடு வாசியற இரண்டும் ஸமாநார்த்தகமேயொழிய ஈஷத்தும் வாசியில்லை. எந்த ஸங்கர்ப்பத்திலும் பலனளிப்பவன் எம்பெருமானேயல்லது ப்ரபத்தியுமன்று, நாமோச்சாரணமுமன்று. * [illegible] * [பலம் அத: உபபத்தே:] என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமியருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளிவை;—"[illegible]." என்று. ப்ரபத்தி பண்ணினாலும் நாமஸங்கீர்த்தநம் செய்தாலும் மற்று எது செய்தாலும் அவை எம்பெருமான் திருவுள்ளத்தில் உகப்புக்கு உறுப்பாகுமத்தனையல்லது அவை நேரே பலனளிப்பவையல்ல. த்ரௌபதி விஷயத்தில் பலனளித்தவன் எம்பெருமானே. பலனளிக்கும்போது திருவுள்ளத்தில் உகப்பு உண்டாகியே தீரவேணும். அவ்வுகப்பு ப்ரபத்தியினாலுண்டாயிற்று என்று ஓரிடத்திலும், திருநாமோச்சாரணத்தினாலுண்டாயிற்று என்று மற்றோரிடத்திலும் சொல்லி யிருந்தாலும் இதில் முரண்பாடு சிறிதும் கிடையாது; இரண்டும் ஒன்றேயன்றி வெவ்வேறுபட்டதல்ல.

இதனை இன்னமும் சிறிது விவரிப்போம். த்ரௌபதீ வஸ்த்ராபஹார வ்ருத்தாந்தம் மஹாபாரதத்தில் ஸபாபருவத்தில் தொண்ணூறாமத்யாயத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் நாற்பத்தொன்று நாற்பத்திரண்டாவது ச்லோகங்கள்— "[illegible]" என்றுள்ளது. இதனால் த்ரௌபதி மாநஸிகமாக ப்ரபத்திபண்ணினாளாகவே ஏற்படுகிறது. வஸிஷ்ட மஹர்ஷியும் "ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:" என்றே சொல்லிவைத்திருந்தாராகையாலே அவருபதேசித்ததும் மாநஸிக ப்ரபத்தியே. இதற்குமேல் "[illegible]—சங்க சக்ரகதாபாணே!" என்று தொடங்கி ஆறுச்லோகங்களினால் அவள் மிகவும் கதறினதாகத் தெரியவருகிறது. அங்கு முடிவில் ஊன்றிப்பார்த்தால் "[illegible]" என்கிற விடத்தில் "அநுஸ்ம்ருத்ய" என்றே சொல்லியிருக்கையாலே அக்குள்ளதெல்லாம் நெஞ்சி லோடினதைச் சொன்னபடியே யாகிறது. "[illegible]—கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்" என்கிற கண்ணபிரானுடைய நிர்வேத ச்லோகத்தில் 'ஆக்ரந்தத்' என்றிருக்கையாலே உரக்கக் கத்தினளென்று தெரியவருகின்றதே யென்று சிலர் கலங்குவர்கள். உள்ளெலாமுருகிக் குரல்தழுத்து நின்றநிலைதான் ஆக்ரந்தனமாகச் சொல்லப்பட்டது. அது ப்ரபத்திநிஷ்டைக்கு சைதில்யத்தை விளைக்கும்படியான வ்யாபாரமன்று. சிலர், த்ரௌபதி சரணாகதி செய்தபோது அந்த சரணாகதியோடு நில்லாமல் கோவிந்தா கோவிந்தாவென்று பன்முறையும் திருநாம ஸங்கீர்த்தனம் செய்ததாகக் காண்கையாலே அந்த நாம ஸங்கீர்த்தநமாகிற உபாயாந்தரஸம்பந்தத்தினால் சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போலே ப்ரபத்தி நழுவிப்போனபடியாலே அது கார்யகரமாகாமற் போயிற்றென்றும், நாமஸங்கீர்த்தநபலமா

கவே வஸ்த்ரவ்ருத்தி ஏற்பட்டதென்றும் வசால்லுவர்கள். இதில் சிறிதும் ஔசித்யம் காண்கின்றிலோம். த்ரௌபதிக்கு சரணாகதி நழுவிவிட்டதென்று சொல்லுவது ஸம்ப்ரதிபந்நமன்று. சரணாகதியினால்தான் அவள் பலன்பெற்றாளென்பது உறுதி. நாமஸங்கீர்த்தநயாகிற உபாயாந்தரத்தில் அவள் கைவைத்தாளென்றும், அதுதான் பலனளித்ததென்றும் ப்ரபத்தியானது அவளுக்கு வ்யபிசரித்துவிட்ட தென்றும் சொல்லுகிறவார்த்தை ப்ராமாணிகமாகுமென்று தோன்றவில்லை.

"ஆழ்வார்கள் ப்ரபத்தி பண்ணிற்றும் அர்ச்சாவதாரத்திலே" என்கிற ஸ்ரீவசநபூஷணஸூக்தியின்படி ஆழ்வார்கள் பண்ணின ப்ரபத்தியிலும் அபரிமிதமான நாமஸங்கீர்த்தனங்களைக் காணாநின்றோம். * உலகமுண்ட பெருவாயனில் எத்தனை திருநாமங்கள் அநுஸந்திக்கப்பட்டனவென்று பார்க்குமளவில் அபரிமிதமான நாமங்கள் காணலாம். இதனால் சணல்கண்ட ப்ரஹ்மாஸ்த்ரம் போலே ஆழ்வாருடைய ப்ரபத்தி நழுவிவிட்டதென்று சொல்லுவாருண்டோ? ப்ரபத்தி நிஷ்டர்கள் தங்களுடைய நிஷ்டையை வெளிக்காட்டக் கூடிய சப்தராசிகளை உச்சாவசமாகப் பொழிவதுண்டு; அவை ஆர்த்தியின் கனத்தைக் காட்டுவதிலே பர்யவஸித்து நிற்குமேயல்லது உபாயாந்தரப்ரவ்ருத்தியாகி சணற்கயிற்றின் ஸ்தானத்திலே நிற்கமாட்டா. எம்பெருமானார் சரணாகதிகத்யத்திலே "சரணமஹம் ப்ரபத்யே" என்றவளவோடு நிற்கவில்லையே. அங்குள்ள வாக்விஸ்தரங்கள் சணல்ஸ்தானத்திலே நிற்பனவென்று நெஞ்சாலும் நினைக்கத் தகாதே.

கிம் பஹுநா? த்ரௌபதி செய்தது சரணாகதியே. அவள் மாநஹாநி நேராவண்ணம் காத்தருள வேணுமென்று இவ்வளவுக்காக ப்ரபத்திபண்ணினாளேயல்லது கண்ணபிரான் ஸாக்ஷாத்தாக ஓடிவரவேணுமென்று ப்ரபத்தி செய்திலள். அவள் கோலின பலன் கைபுகுந்ததென்பதில் ஸந்தேஹமில்லை. பட்டர் ஸஹஸ்ரநாமபாஷ்யத்தின் உபோத்காதத்தில் நாமஸங்கீர்த்தனத்தை ஸ்வதந்த்ரோபாயமாக வைத்து அருளிச்செய்திருக்கிற விஷயங்கள் தனிப்பட்டவை. ப்ரக்ருதத்தில் த்ரௌபதி நாமஸங்கீர்த்தனத்தைத் தஞ்சமாகப் பற்றினவளல்லள். சரணாகதியைத்தான் தஞ்சமாகக் கொண்டாள். அவள் பண்ணின நாமோச்சாரணம் சரணாகதியின் உள்ளீடான தொன்றேயொழிய வேறுபட்டதன்று.

மேகம்பெய்ததனால் நெல்விளைந்தது என்று ஒருவன் சொல்லுகிறான்; தண்ணீர் பாய்ந்தபடியாலே நெல் விளைந்தது என்று மற்றொருவன் பேசுகிறான். இந்த வார்த்தைகளில் பரஸ்பரவிரோத சங்கைக்கு அவகாசமுண்டோ? இதுபோலவே ப்ரபத்தியின் பலனாக வஸ்த்ரவ்ருத்தியாயிற்று என்று சொல்லுவதும், திருநாமம் சொன்னதின் பலனாக அதுவாயிற்று என்று சொல்லுவதும் வ்யாஹதங்களல்லவென்று கொள்ளக்கடவது.

---

# த்ரௌபதியின் ரக்ஷணம்

---

த்ரௌபதியானவள் மஹாஸபையில் துச்சாஸநனால் பரிபவப்படுத்தப்படுகிற ஸமயத்திலே அவள் த்வாரகாநாதன் திருவடிகளிலே ப்ரபத்திபண்ணி ரக்ஷணம் பெற்றாளென்று சொல்லப்படுகிறது. ரக்ஷணமாவது என்ன? என்று ஆராயுமளவில் அநிஷ்டத்தைப்போக்கி

இஷ்டத்தைத் தருகையே ரக்ஷணமென்று மஹான்கள் கூறுகின்றார்கள். இஷ்டத்தைத் தருகை அநிஷ்டத்தைத் தவிர்க்கை என்கிற இரண்டில் ஏதேனுமொன்று செய்தால் ரக்ஷணமாகாது; இரண்டும் செய்தால்தான் ரக்ஷணமாகும். ஆனால் ரக்ஷ்யபூதன் இரண்டையும் கோராமல் இரண்டத்து ஒன்றையே கோரியிருந்து அவ்வொன்றை நிறைவேற்றினால் அது ரக்ஷணமாகாதோ? என்று கேட்கவேண்டா. ஆகும். ஆனாலும் ரக்ஷணம் செய்யுமிடங்களில் அர்த்தாத் இரண்டும் ஸித்தித்தேதிரும். இராமன் விச்வாமித்ரயாகத்தை ரக்ஷித்தானென்கிறோம். விச்வாமித்திரமுனிவர் தம்முடைய வேள்விக்கு இடையூறு விளைக்கும் ராக்ஷஸர்களை வதம் செய்யவேணுமென்று [அநிஷ்டநிவ்ருத்தியை மாத்திரம்] அபேக்ஷித்திருந்தாலும் ஸ்ரீராமபிரான் செய்தருளின ரக்ஷணமானது அநிஷ்டநிவாரண ரூபமாகவும் இஷ்டப்ராபண ரூபமாகவும் தலைக்கட்டியிருக்கின்றது. ராக்ஷஸவதம் செய்தது அநிஷ்டநிவாரணம். யஜ்ஞம் குறையற நடந்தேறி அவபிரதம் செய்வித்தது இஷ்டப்ராபணம். இவ்விதமாகவே எங்கும் காணலாம்.

த்ரௌபதீரக்ஷணத்திலும் அநிஷ்டநிவாரணம் இஷ்டப்ராபணம் ஆகிற இரண்டு அம்சங்களும் காணலாம். த்ரௌபதியின் அபிப்ராயத்தாலே ப்ராபணீயமான இஷ்டம் எது? நிவாரணீயமான அநிஷ்டம் எது? என்று ஆராய்ச்சி செய்யவேணும். ரஜஸ்வலையான த்ரௌபதியை துச்சாஸநன் ஸபையிலே கொண்டு நிறுத்தித் துகிலுரியத் தொடங்கினான்; அப்போது அவளுக்கு மஹத்தான துக்கமுண்டாயிற்று. அதனால் சரணாகத வத்ஸலனான துவரைப்பிரானை நோக்கிச் சரணாகதி செய்தாள். "சங்கசக்ரகதாபாணே! த்வாரகாநிலயாச்யுத!, கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணாகதாம்." என்று அநுஸந்தித்தாள். சரணாகதையான என்னை நீ ரக்ஷித்தருளவேணுமென்றாள். மேலும் "ஹா க்ருஷ்ண! த்வாரகாவாஸிந்! க்வாஸி யாதவநந்தந, இமாமவஸ்த்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதாம் கிமுபேக்ஷஸே?" என்றாள். இப்படிப்பட்ட துரவஸ்தையிலேயிருக்கிற அநாதையான என்னை உபேக்ஷிக்கலாகுமோ? என்றாள். இந்த ச்லோகத்தில் "த்வாரகாவாஸிந்" என்று சொல்லி உடனே 'க்வாஸி' எங்கிருக்கிறாயென்று கேட்டிருப்பதைப் பற்றி விமர்சிக்கவேணும். கண்ணன் த்வாரகையிலிருப்பது தெரிந்துதானே த்வாரகாநிலய! என்றும் த்வாரகாவாஸிந்! என்றும் விளித்தாள். அங்ஙனம் தெரிந்து விளித்தவள் நீ எங்கிருக்கிறாய்? என்று கேட்டதானது, * கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமொருதனி நாயகமான நீ இல்லாவிடமுண்டோ? த்வாரகையில் மாத்திரமன்றே நீ யிருப்பது; அங்குமிங்கு மெங்கு மிருக்கிறாயன்றோ. அப்படியிருக்கின்ற வுனக்கு நான் படும் பரிபவம் தெரியாமலா இருக்கிறது? என்னுமபிப்ராயத்தையுட்கொண்டது.

இதை மேலே ஸ்பஷ்டமாகவும் சொல்லுகிறாள்—"கோவிந்த த்வாரகாவாஸிந்! க்ருஷ்ண கோபீஜநப்ரிய, கௌரவை: பரிபூதாம் மாம் கிம் ந ஜாநாஸி கேசவ" என்று. ஆகவே, நான் படும் பரிபவம் உனக்குத் தெரிந்திருந்தும் இதை நீ பரிஹரியாமலிருப்பது தகுதியோ? என்றிவ்வளவே த்ரௌபதியின் வார்த்தையிலிருந்து நன்றாகத் தெரியவருகின்றது. அவளுடைய பரிபவம் மேன்மேலும் வளர்ந்து செல்லாதபடி உடனே பரிஹரிக்கப்பட்டுவிட்டதென்பது ஸர்வஜநஸம்ப்ரதிபந்நமான விஷயம். ஆக, த்ரௌபதிக்கு விவக்ஷிதமான ரக்ஷணம் குறையற நடந்தேறியதென்று கொள்வதில் ஒருவிதமான விவாதமும் ஒருவர்க்கும் கிடையாது.

அந்த ஸமயத்தில் கண்ணபிரான் நேரில்வந்து ஸேவைஸாதிக்கவேணுமென்பதை த்ரௌபதி நெஞ்சில் ஒரு மூலையிலும் நினைத்திருந்தவளல்லள். கஜேந்திராழ்வான் முதலை துணிபடவேணுமென்கிற விரோதி நிரஸநத்தைக் கருதாமல் எம்பெருமான் நேரில் எழுந்தருளி ஸேவை ஸாதிக்கவேணுமென்பதையே அபேக்ஷித்திருந்தானென்பது "நாஹம் கலேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ" என்கிற கஜேந்த்ரகண்டோக்தியாலும், "தோழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்கிற திருவாய்மொழியாலும் ஸுஸ்பஷ்டம். இவ்விதமான அபேக்ஷை த்ரௌபதிக்கு இருந்ததில்லை. அந்த ஸமயத்தில் இஃது இருக்க ப்ரஸக்தியுமில்லை. கண்ணபிரான் தன்னுடைய அநிர்வசநீயமான குண விசேஷத்தினால் த்ரௌபதி பரிபவப்பட்டபோது ஐயோ! நான் நேரில் சென்று உதவப்பெற்றிலேனே!, அந்தோ! என் பிழைப்பு என்னாயிற்று' என்று துடித்ததுண்டு. இதனால் த்ரௌபதியானவள் கண்ணபிரானுடைய ஸமக்ஷமாகமனத்தை அப்போது விரும்பியிருந்தாளென்று கல்பிக்கலாகாது. வஸ்துஸ்திதி இப்படியிருக்க, ஸ்ரீ க்ருஷ்ணன் நேரில் எழுந்தருளாமைக்குக் காரணமென்னவென்றாலென்று அஸ்தானே ஒரு சங்கையைக் கிளப்பிக்கொண்டு, சரணாகதி செய்பவர்கள் புருஷகாரத்தை முன்னிட்டே பற்றவேணுமென்பது முறையென்றும், த்ரௌபதி அப்படி பற்றவில்லையென்றும் அதனாலேயே அவளுடைய சரணாகதி விபலமாகி ஸ்ரீ க்ருஷ்ணன் நேரில் எழுந்தருள நேராமல் போயிற்றென்றும் சிலர் சொல்லிக்கொண்டிருப்பது ப்ராமாணிகமன்று.

மற்றும் சிலர், ஸ்ரீருக்மிணிப்பிராட்டியானவள் சில ஔசித்யங்களை ஆலோசித்து கண்ணபிரானைக் கிளம்பவொட்டாமல் தன் லீலாவிசேஷங்களாலே போகரஸங்களில் அழுந்தச்செய்துவிட்டாளென்று கூறுவர். இதெல்லாம் ஹரிகதைக்காரர்களின் ஸபாவ்யாமோஹக வ்யாஹாரவிசேஷங்களத்தனை! மேலும் இவை ப்ரக்ருத ப்ரஸ்தாவத்தில் அத்யந்தம் அநுபயுக்தங்கள். ... ... ... ... ... (*)

---

# விளம்பரம்.

---

## ஸ்ரீமத் வால்மீகிராமாயண வசனம்-,

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் கதைகளை உள்ளபடியறிந்து கொள்வதற்கு உரியதான இந்த வசன நூல் பால காண்டம் முதல் சுந்தர காண்டம் வரையில் ஒரு வால்யமாக பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. இதன் விலை ரூ. 4—0—0 மட்டும். போஸ்டேஜ் தனிப்பட்டது.

யுத்த காண்டமும் உத்தரகாண்டமும் தனி வால்யமாகக் கிடைக்கும். சித்திரை வைகாசியில் அது முடிவுபெறும்.

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

# அறுபத்திநான்கு நல்வார்த்தைகள்.

[நிகழும் ஜயவாண்டு பங்குனித்திங்களில் விசாகத்தினன்று அடியேனுக்கு அறுபத்தினான்கு வயது பூர்த்தியாவதை முன்னிட்டு, ஆப்தர்கள் அடிக்கடி நினைவிற் கொள்ளுமாறு அறுபத்தினான்கு நல்வார்த்தைகளை விஜ்ஞாபிக்க விரும்புகிறேன். இவற்றை நல்வார்த்தை யென்பது ஸ்வாபிப்ராயத்தாலே. இந்த நல்வார்த்தைகள் ஏகவிஷயகங்களல்ல; அநேக விஷயகங்கள்.]

1. நம்மைப்பற்றிப் பிறர் குற்றமாகவோ குறையாகவோ எது கூறினாலும் சித்தத்தில் சிறிதும் விகாரமின்றியே உல்லாஸமாக விருக்கப் பழகவேண்டும். உண்மையில் நம்மிடத்தில் குணங்கள் மெலிந்து தோஷங்களே மலிந்து கிடக்குமாதலால் அப்படிப்பட்ட தோஷங்களை நேரிலோ மறைவிலோ எடுத்துரைப்பாருளரேல் அவர்களை நாம் நமக்கு மஹோபகாரம் செய்தவர்களாக நினைக்கவேண்டும்.

2. "குணகூஷதலபிக்ரமாத்" என்று வேதாந்ததேசிகன் பணித்த முறையில் நம்மிடத்தில் ஸ்வல்ப குணங்களுமிருக்கலாம். அதைப்பிறர் பாராட்டிப் புகலவேண்டுமென்று நாம் ஆசைப்படுவது தகுதியன்று.

3. குற்றத்தைக் குற்றமாகவும் நற்றத்தை நற்றமாகவும் கொள்வதைவிட, குற்றத்தையும் நற்றமாகக் கொள்வதே நலமென்று பெரியார் கூறுவதால் இத்தகைய நலம்வாய்ந்த சில மஹான்கள் தம்முடைய வாத்ஸல்ய குணத்தின் மஹிமையினால் குற்றங்களில் சிறிதும் கண் வைத்திடாமல் நற்றமாகவே பாராட்டிப் புகழ்வர்களெனினும் அந்தப் புகழ்ச்சியில் நாம் மயங்கிவிடக்கூடாது. 'இவர்கள் நம்மிடத்திலில்லாதவற்றை ஏறிட்டுக் கொண்டாடுகிறார்கள்' என்றே நாம் உள்ளபடி நினைக்கவேண்டும்.

4. குற்றங்குறைகளைக் கூறுமவர்களே ஸத்யவாதிகள். நம்மீது பிறர்கூறுகிற குற்றங்குறைகள் உண்மையாக நம்மிடத்தில் இல்லையென்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் அப்படி நினைப்பது தவறு; நம்மிடத்தில் இல்லாதவற்றைப் பிறர் சொல்லார்கள் என்றும், நமக்குத்தெரியாதபடி நம்மிடத்தில் இருப்பவைகளையே பிறர் தெரிந்து சொல்லுகிறார்கள் என்றும் நாம் நினைக்கவேண்டும்.

5. எதற்காக இப்படி நினைப்பது? நம்முடைய குற்றமோ நற்றமோ நமக்குத் தெரியாமலிருக்குமோ? பிறர் பொறாமையினாலும் மற்றும் பலவகைக் காரணங்களினாலும் நம்மீது சில பல குற்றங்களை ஏறிட்டுக் கூறினால் அவற்றை நாம் எதற்காக இசையவேண்டும்? உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்; இல்லாது ஏறிட்டுக் கூறுகிற குற்றமாயிருந்தால் மறுப்போம்—என்று இங்ஙனே சிலர் வாதம் செய்யக்கூடும். அன்னவர்களுக்கு நாம் சொல்லுவதாவது, "உள்ள குற்றமாயிருந்தால் இசைந்து கொள்வோம்" என்று இவ்வளவாவது சொல்லுகிறீர்களே, இதுவே பரமானந்தம்; உள்ள குற்றங்களையும் இல்லை செய்வார் மலிந்த இவ்வுலகில் உள்ள குற்றங்களை உள்ளபடி ஒப்புக்கொள்வார் சிலராவது தேறினால் ஈதொப்பதின்ப முண்டோ? இல்லாது ஏறிட்டுக் கூறுகிற குற்றங்களை நீங்கள் மறுத்துக்கூறினாலும் உள்ள குற்றங்களையாவது ஒப்புக்கொள்வதற்காக உகக்கிறோம் என்பதே.

6. ஆனால், உண்மையில் நம்மிடத்து இல்லாத குற்றங்குறைகளைப் பிறர் ஏறிட்டுக் கூறுகிறார்களென்று நினைப்பது மிகவும் தவறு. வேதாந்த தேசிகன் ஸுபாஷித நீவியில் ஓர் அற்புதமான ஸுபாஷிதம் பணித்துள்ளார்; அதாவது, * பச்யதி பரேஷு தோஷாந் அஸதோபி, ஸதோபி நைவ குணாந்। விபரீதமிதம் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: = பச்யதி பரேஷு தோஷாங் அஸதோபி, ஸதோபி நைவ குணாந், விபரீதமிதம் ஸ்வஸ்மிந் மஹிமா மோஹாஞ்ஜநஸ்யைஷ: * என்பதாம். இதன் பொருளாவது, பிறரிடத்தில் எவ்வளவு குணமிருந்தாலும் அவற்றை நாம் தெரிந்துகொள்வது கிடையாது; அவர்களிடத்தில் தோஷம் இல்லாவிடினும் அது மலைமலையா யிருப்பதாகத் தெரிந்து கொள்ளுகிறோம்; இது ஸ்வாத்ம விஷயத்தில் விபரீதமாகிறது: (அதாவது) நம்மிடத்தில் மலை மலையாக தோஷங்களிருந்தாலும் அவற்றிலொன்றுகூட நாம் தெரிந்து கொள்வதில்லை; குணம் லவலேசமும் இல்லாதிருந்தாலும் குணக்கடலாகவே நம்மை நாம் நினைத்துக் கொள்ளுகிறோம்—என்பதாம்.

7. இது அதிசயோக்தியன்று. யதார்த்த கீர்த்தனமே. நம்மிடத்துள்ள குற்றங் குறைகளை நாம் தெரிந்துகொள்ள முடியாதபடி மாயை மறைக்கிறபடியால் பிறர் வாயிலிருந்தே இவற்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டியதாகிறது. பிறர் பொறாமையினால் ஏறிட்டுக் கூறுவதாகவே யிருக்கட்டும். பிறர்க்கு நம்மீது பொறாமையிருப்பதாகவும் நம்முடைய குணங்களையெல்லாம் அவர்கள் தோஷமாக மாற்றிப் பிதற்றுவதாகவும் நாம் நினைக்கவே கூடாது. இப்படி நினைத்தோமாகில் அது நம்முடைய மிகுந்த ப்ரமமேயாகும். கீழே உதாஹரித்த ஸுபாஷிதத்திற் கண்டபடி மோஹாஞ்ஜனத்தின் மஹிமையே யிது என்று திண்ணமாக எண்ணவேணும்.

8. சிலர் நம்மைத் தூஷித்ததனால் நம்முடைய கிரீடம் கீழே விழுந்துவிடுமாவென்று இதையே மிகவும் ஆலோசிக்கவேண்டும். உண்மையில் நமக்கொரு கிரீடம் உள்ளதா இல்லையா என்கிற ஆராய்ச்சி வேண்டா; பெரியதொரு கிரீடம் நவரத்னகசிதமானது நம் தலையில் ஏறியிருப்பதாகவே வைத்துக் கொள்வோம். அது சிலருடைய தூஷணைகளினால் சிதைந்தொழியுமாவென்று விமர்சிக்கவேண்டும். உள்ள குற்றங்களையோ இல்லாத குற்றங்களையோ பிறர் எவ்வளவும் சொல்லி ஊரும் நாடு முலகமு மெங்கும் பிரசாரம் செய்யட்டுமே. அதனால் நமக்கென்ன நஷ்டமென்று சிறிது சிந்திக்கவேண்டாமா?

9. த்ருஷ்டத்தில் நஷ்டமென்றும், அத்ருஷ்டத்தில் நஷ்டமென்றும் நஷ்டம் இரண்டு வகைப்படும். ஆமுஷ்மிக புருஷார்த்தத்தில் கெடுதி விளைவது அத்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். அப்படிப்பட்ட நஷ்டத்தை இவர்கள் செய்யும் தூஷணைகள் சிறிதும் உண்டுபண்ணமாட்டா வென்பது திண்ணம். இனி, த்ருஷ்டத்தில் நஷ்டமாவது, இவ்வுலகில் சிலர் நம்மிடத்தில் கௌரவம் வைத்திருந்தால் அது மாறும்படியாகச் செய்வது, யாரேனும் சிலர் நமக்குப் பொருளுதவி செய்வதாயிருந்தால் அதைத் தவிர்ப்பது......ஆக இப்படிப்பட்ட சில நஷ்டங்கள் நேருவதே த்ருஷ்டத்தில் நஷ்டமெனப்படும். சிலருடைய தூஷணைகளினால் இப்படிப்பட்ட நஷ்டம் நமக்கு நேர்ந்து விடுகிறதென்றே வைத்துக்கொள்வோம். இது நாம் ஆவலோடு கோரவேண்டிய நஷ்டமல்லவா? பிறருடைய தூஷணைகளுக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கவேணு மென்பதையறியாமல் அவற்றிலே மனவேறுபாடு கொள்கின்றவர்கள் மநுஷ்யகோடியிற் சேர்ந்தவர்களாவர்களா? அன்னவர்கள் செய்யும்

கௌரவமும் ஸத்காரமும் நமக்கு எதுக்கு? இந்த நஷ்டத்தைப் பரம லாபமாகவன்றோ நினைக்கவேண்டும், இப்படிப்பட்ட லாபத்தைப் பெறுவிக்கின்ற வார்த்தைகளை வாரி யிறைக்குமவர்கள் நமக்கு மஹோபகாரகர்களென்றல்லவோ கருதத்தக்கவர்கள். அவர்களை த்ரோஹிகளென்று நாம் நினைப்பது மருளல்லவா?

10. தூஷிக்குமவர்கள் எவ்விதமான குற்றங்குறைகளைச் சொல்லித் தூஷிக்கிறார்களென்று பார்க்கவேண்டும். இவ்வுலகத்தவர்களிடத்திலே எங்கும் ஸம்பாவிதங்களான தோஷங்களைச் சொல்லித் தூஷிப்பார்களேயன்றி, அஸம்பாவிதமாய் அபூர்வமான சில தோஷங்களைச்சொல்லி நிந்திக்க முடியாதன்றோ. ஸ்ரீராமக்ருஷ்ணாதி பகவந் மூர்த்திகளிடத்தும், ஸர்வலோக பூஜிதர்களாய் விளங்கின பூர்வாசாரியர்களிடத்தும் இன்றைக்கும் பலர் சொல்லிக் கொண்டிருக்கிற தூஷணைகளுக்கு ஸஜாதியங்களான தூஷணைகளையே யன்றோ நம்மிடத்தும் சொல்லவல்லார். பெரியார்களுக்குக் கிடைத்த ஸத்காரங்களே நமக்கும் கிடைத்தால் இது நமக்கொரு பெருமையென்று நாம் நினைக்கவேண்டாமா?

11. ஸர்வஜன ப்ரத்யக்ஷமாக எவ்வளவோ அபரிமிதமான தவறுகளை நிச்சலும் செய்துபோருகின்ற வழிப்போக்கர்களைப் பற்றி ஒன்றும் வாய் திறவாமல் பெருமதிப்பாளர்களைப் பற்றியேயன்றோ தூஷிக்க ருசிகிளர்கின்றது தூஷகர்களுக்கு......இங்ஙனே பல விஷயங்களை யாராய்ந்தால் குற்றங்குறைகள் கூறுவார் பக்கலில் நாம் மிகவும் க்ருதஜ்ஞதை செலுத்த வேணுமே யல்லது சிறிதும் வெறுப்புக்கொள்ள இடமில்லை.

12. *காவ்யஶாஸ்த்ரவிநோதேந காலோ கச்சதி தீமதாம்-காவ்யசாஸ்த்ரவிநோதேந காலோ கச்சதி தீமதாம்* என்றபடி காவ்ய சாஸ்தரவ்யாஸங்கங்களினால் மஹான்கள் போதைப்போக்காநின்றால் அங்ஙனே போதுபோக்க பாக்கியமற்றவர்கள் தங்கள் போதை எப்படித்தான் போக்குவது? ‘அவனப்படி’ என்று எதையாவது சொல்லித்தானே போதைப் போக்கித் தொலைக்கவேண்டும். ஏதோ ஒருவிதத்தில் அவர்களும் மஹான்களையே சிந்தையிலும் வாயிலும் கொண்டிருந்து புனிதர்களாகிறார்கள் என்று உகப்பதல்லவா உரியது. ஆகவே தூஷகர்களென்று சிலரை நாம் வெறுப்பது சிறிதும் பொருந்தாது.

13. * ஆனால் இப்படிப்பட்ட மனப்பழக்கம் எளிதில் தேறாது. அநியாயமாய்த் தூஷிக்கிறார்களே யென்று கோபதாபங்களே மிகமிகவுண்டாகும். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில், இதுவரை நாம் கீழே விவரித்த விஷயங்களையெல்லாம் ஆர அமர நெஞ்சிற் கொண்டு விவேக சக்தியைச் சிறிது பயன்படச் செய்தால் அதற்கு மேற்பட்ட ஆத்மானந்தமில்லையாகும். நாம் செய்துகொள்ளவேண்டிய மனப்பழக்கங்களில் இதுவே முதன்மை பெற்றுச் சிறக்கும். இங்ஙனே பழகினாரை ஒருவரும் வெல்லகில்லார்.

14. உலகில் எங்கும் ஒரே வகையாகப் பல வ்யவஹாரங்கள் சிதைந்துகாண்கின்றன; அந்த வ்யவஹாரச் சொற்களின் உண்மை வடிவம் என்ன? என்பதை ஆராய்ச்சி செய்து தவறுகளை நாம் திருத்திக்கொள்ளவேணும். “ஸ்வாமி திருவுள்ளத்தில் என்ன சீதளம்?” என்றும், “ஸ்வாமி திருவுள்ளத்தில் ஏதோ சீதளம் ஏற்பட்டாப்போலிருக்கிறது” என்றும் இப்படி பலரும் பல விடங்களிலும் பேசி வருகிறார்கள். கோபம் என்னும் பொருளை விவக்ஷித்து சீதளமென்று ப்ரயோகம் செய்துவருகிறார்கள். குளிர்ச்சியென்னும் பொருளதான

சீதளமென்கிற சொல்லுக்கு கோபம் எப்படி பொருளாகுமென்று விமர்சிக்கவேண்டும். உண்மையென்னவெனில், சீற்றம் என்னுஞ்சொல் அனைவருமறிந்ததே. அதற்குக் கோபமென்கிற பொருள் ப்ரஸித்தமானதே. சீத்தம் என்று வழங்கி வந்தார்கள். அது சீதமாய் சீதளமாயிற்று. இதுவே உண்மை.

15. இங்கே சிலர்கூறுவது என்னவென்றால், தேஹத்தில் உஷ்ணம் அதிகமானால் அது சீதளமாகப் பரிணமிக்குமாம்; அது கெடுதலாம். ஆகவே சீதளமென்பதே உண்மையான சொல்வடிவமாயிருக்கலாமென்று. ஆயுர்வேத ஸித்தமான அந்த சீதளத்திற்கும் "ஸ்வாமி திருவுள்ளத்தில் என்ன சீதளம்?" என்கிற வார்த்தையிலுள்ள சீதளச் சொல்லுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்பதை அறிவுடையார் அறிவர்கள். சீற்றமென்னுஞ் சொல்லே க்ராம்யச் சிதைவாய் சீதளமாகி அதுவே விமர்ச சக்தியற்றவர்களின் வாக்கில் புகுந்து வருகின்றது.

16. * ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகைகளில் கல்யாணம் நடக்குமிடத்து, பச்சைக்கல்யாணத்தினன்று அத்யாபகர்கள் நாச்சியார் திருமொழியில் வாரணமாயிரம் பதிகத்துடன் சீர்பாடல் பாடுவதென்றொரு பத்ததியுண்டு; அப்போது, "சீர்பாடி களிமண்பா டப்போமே" என்றுகோஷ்டிகளில் கூறுவதைப் பெரும்பாலும் அனைவரும்கேட்டிருப்பர்கள். அந்த வாக்யத்தின் உண்மையான ஆநுபூர்வி எப்படிப்பட்டதென்று விமர்சிக்கவேண்டுவதும் ப்ராப்தம். "களிமண்பா டப்போமே" என்பது ஸம்பத்தமான வாக்யமன்று என்பதை யாவருமறிவர் உண்மையான வாக்யம் விகாரமுற்றிருக்கிறதென்பதை விவேகிகள் அறிந்திருப்பர்கள். அவ்வுண்மைவாக்யம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டாமா? "சீர்பாடித் தளிர் பண் படுப்போமே" என்றிருக்கலாமென்பர் சிலர். அதுதான் களிமண்பாடப் போமே யென்று மாறிவிட்டதென்றும் சொல்லுகிறார்கள். "சீர்பாடிக் களிமின் களிப்போமே" என்பது தான் உண்மை வடிவம். 'சீர்பாடல் பாடி நீங்கள் ஸந்தோஷப்படுங்கள், நாங்களும் ஸந்தோஷப்படுகிறோம் என்றபடி. இந்த வாக்கியத்தை இசையிலே நீட்டிச் சொல்லும்போது களிமின்கா ளிப்போமே என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள் முன்னவர். நாளடைவில் களிமண்பாவாகவும் டப்போமே யாகவும் விகாரத்தைப் பெற்றொழிந்தது.

17. எங்கும் திவ்யப்ரபந்தம் தொடங்கும்போது ஸாதித்தருளாய் என்றோ ஸாதித்தருள என்றோ தொடக்கக்காரர் கைகூப்பிச் சொல்லிவிட்டுப் பிறகு தனியன்களையோ பாசுரங்களையோ சொல்லுவது வழக்கமாகக் காண்கிறது. ஸாதித்தருளவென்கிறவிது யாரை நோக்கிச் சொல்லுகிறதென்று கேள்வி பிறக்குமே ; கோஷ்டியில் பல பெரியோர்கள் எழுந்தருளி யிருக்க, ஸஹஸா ஒருவர் ஆரம்பம் செய்வது தகுதியன்றாதலால் நியமனம் ஸாதித்தருளவேணுமென்று அப்பெரியார்களை நோக்கிப் ப்ரார்த்தித்துத் தொடங்குகிறபடி யென்று மஹான்கள் பணிக்கக் கேட்டிருக்கிறோம். பல திவ்ய தேசங்களில் ஸாதித்தருள வென்று அல்லாமல் சாய்த்தருள வென்றே சொல்லப் பெரும்பாலும் கேட்டுவருகிறபடியால் எம்பெருமானை நோக்கித் திருச் செவிசாய்த்தருளவேணுமென வேண்டி ஆரம்பம் செய்வதாகக் கொள்ளலாமென்று ஒரு பெரியார் பணித்தார். "மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே" என்கிற ஆழ்வார் பாசுரத்திற்குப் பொருந்தியிருக்குமிது. ஆனாலும் இதை ஒரு ரஸமான வார்த்தையாகக் கொள்ளலாமேயன்றி இதுதான் உண்மைச் சொல்வடிவமென்று கொள்ளலாகாதென்பது பலருடைய கருத்து.

18. சரீரம் தோன்றும் போதே வியாதிகளும் கூடவே தோன்றுகின்றன. "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்கிறார்கள். வியாதியில்லாத சரீரமே இருக்கமுடியாது. பூர்வாசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளில் "பைசல் கைசு, நோய் முக்கைசு" என்கிற வொரு திவ்ய ஸூக்தியைக் காண்கிறோம். பைசல் என்றது பயல் என்றபடி; கைசு என்றது கையது என்றபடி. [குழந்தை ஒரு சாணுள்ளது; அக்குழந்தைக்கு நோய் மூன்று சாணுள்ளது] என்பது கருத்து, உடலானது தோன்றியது முதலாக மாயும் 'வரையில் வியாதிகளுக்குவசப் பட்டேயிருக்குமென்று அனுபவத்தாலும் திண்ணமாக அறிகிறோம். வியாதிகளோ பல வகைப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் பலவகையான மருந்துகளும் அநாதிகாலமாகவே யேற்பட்டிருக்கின்றன. ஆயுர்வேத சாஸ்த்ரமென்பது இன்று நேற்று தோன்றியதன்று. மேல் நாட்டினர் பலவகையான சிகித்ஸை முறைகளையும் மருந்துகளையும் கண்டு பிடித்து வெற்றிபெற்று வருகிறார்கள். இன்னமும் நாள்தோறும் புதியபுதிய மருந்துகளும் சிகித்ஸாப்ரகாரங்களும் 'கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன வென்றும் கேள்விப்படுகிறோம். மருந்து ஸ்வீகரித்தால் வெகுவாய் வியாதி தணியஆரம்பிக்கிறதென்பதையும் அனுபவத்தில் பார்த்துவருகிறோம். ஆகவே வைத்ய முறைகளில் நாம் வெறுப்பும் அவநம்பிக்கையும் கொள்ளக் காரணமில்லை. இது இப்படி நிற்க. இளமை தொடங்கி அடியேனுக்குள்ள எண்ணத்தையும் அநுபவத்தையும் இங்குத் தெரிவிக்க விருப்பமுண்டாகிறது. அடியேனுக்கு மிக்க இளம்பிராயம்; ஏழெட்டு வயது இருக்கலாம். அப்போது ஒரு நாள் கடினமான ஜ்வரம் தோன்றியது. இரண்டு மூன்று நாட்களுள் அது மிகமிக அதிகரித்தது. என் மாதாவும் மாதாமஹி பிதா மஹிகளும் ஏதோ கை மருந்தைத் தேனில் குழைத்துக் கொடுத்து வருகிறார்கள். கவலைக்கிடமான நிலைமை யுண்டாகியும் திருத்தகப்பனார் சிகித்ஸையில் சிறிதும் ஊக்கங்கொள்ளவில்லை. 'ஏகபுத்ரனாயிற்றே, இப்படியும் உபேக்ஷையாயிருக்கலாமா?' என்று பலரும் வந்து சொல்லுகிறார்கள். 'தகுந்த டாக்டர்களை யழைத்துக் காட்டக் கூடாதா? என்றும் ஆப்தர்கள் பலர் கண்ணீர்ப் பெருக்குடன் சொல்லுகிறார்கள். அப்போது திருத்தகப்பனார் அவர்களுக்குக் கூறிய மறுமொழி அடியேனுக்கு நன்றாக நினைவிருக்கிறது. இன்று நேற்று போலிருக்கிறது. "நோயும் தீட்டும் ஒன்று" என்றார். அதற்கு வியாக்கியானமும் தாமே செய்தார்; பங்காளிகள் முதலானாருடைய ஜனனமரண காலங்களில் தொண்ணூறு நாழிகைத் தீட்டு, மூன்று நாளைத்தீட்டு, பத்துநாளைத்தீட்டு என்றிப்படி ஆசௌசம் நேர்கின்றது. ஸ்த்ரீகளுக்கு முப்பது நாளைத்தீட்டு, நாற்பது நாளைத் தீட்டு என்று முண்டாகிறது. இப்படிப்பட்ட தீட்டுகளுக்குக் காலத்தால் பரிஹாரமேதவிர மருந்தினால் பரிஹாரமுண்டோ? தீட்டு கழியவேண்டிய நாளில் அது தன்னடையே கழியக் கூடுமேயல்லது மருந்து ஸ்வீகரித்துக் கழிக்கக் கூடியதன்றே. அப்படியே வியாதிகளும் காலத்தினால் கழியக்கூடியவைகளே என்று.

19. ஆனால் ஒரு வாசியுண்டு; தீட்டு நேர்ந்தால் இன்ன நாளில் இது கழியக்கூடியதென்கிற நிச்சய வுணர்ச்சி நமக்கு வலிதாகவுண்டு. வியாதிகள் நேர்ந்தால் அது கழியுங் காலம் நிச்சயித்துக்கொள்ள முடியாமலிருக்கின்றது. இதுவே வாசி. மற்றொரு வாசியுமுண்டு; நேருகிற தீட்டுகள் குறித்த காலத்தில் அவசியம் நீங்கி விடுமென்கிற நம்பிக்கையுண்டு. வியாதிகள் விஷயத்தில் அது கிடையாது.

20. தோலின் மேல் தோன்றும் விரணங்களுக்கு சிகித்ஸை அவசியமென்று நினைக்கலாம். உள்ளே ஏற்படும் வியாதிகளுக்கு ஔஷதங்களை உபயோகப்படுத்தாம

லிருக்கலாமென்பதே இளமை தொடங்கி அடியேனுடைய எண்ணமும் அப்யாஸமும். ஔஷத ப்ரயோகங்களினால் வியாதி தணிந்து போவதைப் பலர் அநுபவத்தில் கண்டிருப்பது போலவே அடியேனும் ஒரு மருந்து மில்லாமல் நோய் தணிவதை ஸ்வாநுபவத்தில் பலகால் கண்டிருக்கிறேன். ஔஷதஸேவை பண்ணியும் பலரிடத்தில் அது நிஷ்ப்பலமாகிற தென்பதை யாரும் அபலாபம் செய்யமுடியாதன்ரே. ஆகவே ஔஷத ஸேவை பண்ணுதைதனுல் மரணமும் மரணபர்யாயமான கஷ்டமும் நேர்ந்துவிடும் என்கிற வார்த்தைக்கும் அவகாசமில்லை. இப்போது அடியேனுடைய ஸ்திதி மருந்தையபேக்ஷிக்கிறது. இதுதான் இங்கு விவக்ஷிதம்.

21. ப்ராஹ்மண ஜாதியிற் பிறந்தவர்கள் நூற்றில் ஒருவரிருவராவது வேதமோதுவது வழக்கம். அப்படியே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஜனித்தவர்கள் நூற்றில் ஒருவரிருவராவது தமிழ் வேதமாகிய திவ்யப்ரபந்தங்களை யோதுவது வழக்கம். ஒவ்வொரு ஊரிலும் சில சில விடங்களிலாவது வேதாத்யயநத்வனி விச்சேதமடையாமல் கேட்டுக்கொண்டிருந்ததுண்டு. பிராமணர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் பெரும்பாலும் வியாபாரங்களிலும் உத்யோகங்களிலும் சென்றுவிட்டாலுங்கூட வைதிக ஸத்ததிகள் மூலைமுடுக்குகளில் வேதாத்யயந பரம்பரையை நிரந்தரமாக நடத்திவந்ததுண்டு. பத்திருபது வருஷ காலமாக இந்த பத்ததி மிகவும் மழுங்கி வருகின்றது. அக்ரஹாரங்களில் சிலவிடங்களில் வேதாத்யயந கோஷமும்சிலவிடங்களில் திவ்யப்ரபந்தாத்யயந கோஷமும் செவிக்கினிதாகச் செவிப்பட்டுக்கொண்டிருந்தது. இப்போது அதெல்லாம் கனவு கண்டாப்போலாய்விட்டது. கிராப்பும் முக க்ஷௌரமுமில்லாத பிராமணப்பிள்ளைகள் தேடிப்பிடிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். சிகாயஜ்ஞோபவீதங்களை வைத்துக்கொண்டிருக்கின்ற சிலரும் வேதமோத வெட்கப்படுகிறார்கள். 'கண்டம் சுஷ்கமாகும்படி வேத மோதுவதனுல் ஒற்றைக் காசுக்கு வழியுண்டா?' என்று கூசாமல் கேட்பவர்களே எங்கும் மலிந்துவிட்டார்கள்.

22. வேதமோதுகிற கதை கிடக்கட்டும். தர்க்க வியாகரணுதி சாஸ்த்ரங்களையும் காவ்ய நாடகாலங்காராதி ஸாஹித்யக்ரந்தங்களையும் பிராசீநபத்ததியில் வாசிப்பவர்கள் தாம் உண்டோவென்று பார்த்தால் ஒருவரிருவர்கூட ஓரிடத்திலும் தேறமாட்டார்கள். சிரோமணி பரீக்ஷை யென்று ஒன்று ஏற்பட்டபிறகு தலைகாலில்லாமல் சில புத்தகங்களை வாசித்து ஒன்றிலும் ஆழ்ந்த ஞானமில்லாமல் சிரோமணி பட்டம் பெற்றவுடனே உத்யோகங்களுக்கு முயற்சி செய்வதும், அந்த முயற்சி பலித்துவிட்டால் கிடைக்கிற பொருளைக் கொண்டு தேஹயாத்திரை நடத்திக்கொண்டு போதைப் போக்குவதும் இவ்வளவே பெரும்பாலும் எங்குங் காண்பதாகும்.

23. ஸாமாந்ய சாஸ்த்ரங்களை வாசிப்பதென்பது வேதாந்த சாஸ்த்ரத்தின் தெளிவுக்காக ஏற்பட்டதேயொழிய அது ஸ்வயம் ப்ரயோஜநமன்று. இக்காலத்தில் வேதாந்த சாஸ்த்ரத்தைப் பொருள்படுத்துவார் இருப்பதாகவே தெரியவில்லை. "அதனுல் என்ன ப்ரயோஜனம்?" என்கிற கேள்வியே ஒவ்வொருவர் வாயிலும் வருவதாயிற்று. ப்ரயோஜனத்திற்கு ப்ரயோஜனம் கேட்டால் யாரால் விடையிறுக்கமுடியும். நாம் தேஹ போஷணம் செய்வது எதற்காக வென்று கேட்டால் உண்மையான விடை யிறுக்க ஒருவராவது முன் வருவரோ?

24. "செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்றார் குறளாசிரியர். செவியுணவு கொள்வதே முக்கியமென்றும் அதற்கு அங்கமாகவே வயிற்றுணவு

கொள்ளவேண்டு மென்றும் இதனால் தெரிவிக்கப்பட்டதாகிறது. வயிற்றுணவை முக்கியமாகக் கொண்டு மற்றவற்றையெல்லாம் அதற்கு உறுப்பாகக் கொள்வார்க்கு நாம் என்ன சொல்ல முடியும்? * [illegible]—புபுக்ஷிதம் ந ப்ரதிபாதி கிஞ்சித்* என்றொரு வார்த்தையுண்டு. ‘பசியுள்ளவனுக்கு எதுவுமே தோன்றாது’ என்பது இதன் பொருள். வயிற்றுக்கு விடைசொன்ன பிறகே எதுவும் கவனிக்க முடியுமாதலால் அவரவர்கள் தேஹ யாத்திரையை முக்கியமாக நோக்குவதில் குறை கூறவு மொண்ணாது. காலமோ மிகவும் கடினமாகவுள்ளது. ரூ 10,15 ரூபாயில் தேஹயாத்திரை நிர்வஹித்தவனுக்கு இக்காலத்தில் நூறு ரூபா யிருந்தாலும் போதவில்லை யென்பது வாஸ்தவம். வேதாத்யயனமும் வேதாந்த காலக்ஷேபங்களும் செய்து கொண்டிருந்தால் வயிற்றுக்கு என்னாகும்? என்கிற கேள்வி அநுசிதமென்று நாம் நினைக்க முடியுமா? அது உசிதமான கேள்வியே. வைதிக வித்யாப்யாஸங்கள் மலினமாய் விடுகிறதே யென்கிற நிர்வேதத்தை நாம் வெளியிடாமலிருக்க முடியவில்லை.

25. பண்டைக் காலத்தில் வைதிகவித்யைகளுக்கு மஹா ராஜாக்களின் ஆதரவு அதிகமா யிருந்தது. அதனாலேயே முன்பு அந்த வித்யை தழைத் தோங்கிவந்தது. இக்காலத்தில் இதை ஆதரிப்பாரில்லை. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. (மைஸூர்) ஸ்ரீ பரகாலஸ்வாமி, ஸ்ரீமத் அஹோபிலமடாதிபதிகளான அழகியசிங்கர் ஸ்வாமிபோல்வார் வைதிக வித்யையின் பெருமையை யுணர்ந்தவர்களாகையால் ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேபங்கள் செய்யும் வித்யார்த்திகளுக்கு போஜனமளித்தும் விசேஷ ஸம்பாவனையளித்தும் ஆதரித்தாலுங்கூட அதிகாரிகள் அருமைப்படுகிறார்கள். சிலர் அதிகாரிகளாக வந்துசேர்ந்தாலும் அவர்களின் ஞாபகமெல்லாம் உத்யோக முயற்சியிலேயே யுள்ளதாகச் சொல்லுகிறார்கள். ஹிந்தீபாஷையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆங்காங்கு உத்யோகங்கள் கிடைக்கின்றனவாம். அதற்குரிய பல பரீக்ஷைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். பலரும் அந்த பரீக்ஷைகளுக்குப் பாடங்கள் வாசிப்பதும் பரீக்ஷைகளுக்குப் போவதும் உபாத்யாயபதவிகளில் அமர்ந்து தேஹயாத்திரைக்கு வழி கிடைத்ததென்று களிப்பதுமாயிருக்கிறது. மடாதிபதிகளிடத்தில் ஸ்ரீ பாஷ்யாதி காலக்ஷேபத்தில் அந்வயம் காட்டியிருக்கிறார்களே தவிர, இரவும் பகலும் வ்யாஸங்கமெல்லாம் ஹிந்தீபாடங்களிலேயேயென்று அவரவர்களினாலேயே தெரிய வருகிறது.

26. ஸம்ஸ்க்ருத சாஸ்திரங்களை யதிகரித்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் எவ்விதமான உத்யோகத்திற்கும் செல்லாமல் நம்முடைய பூர்வாசார்ய திவ்யக்ரந்தங்களிலேயே போதுபோக்கிக் கொண்டு அவற்றின் விசேஷப்ரசாரமார்க்கத்திலே ஊன்றியிருக்க வழி செய்தால் நலமாயிருக்கும். இது நம் ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதிகளுக்கு அஸாத்யமன்று. இதை அவர்கள் திருவுள்ளம் பற்றவேணும்.

(தொடரும்)

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின்

# ஜய மீன விசாகோத்ஸவப் பத்திரிகை

ஸ்ரீஸ்வாமியின் அறுபத்துநான்காம் திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு

**ஸ்ரீகாஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்**

**நாளது பங்குனிமீ 1உ விசாகநக்ஷத்ரம் முதல் 28உ திருவிசாகம் வரை**

**(14-3-55 to 10-4-55) (28 நாள்)**

திவ்ய ப்ரபந்தங்களைவை வேதபாராயணம் ரஹஸ்யாநு ஸந்தானம் ஸ்தோத்ரபாடம் வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும்.

ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டிகள் நடந்த ஸம்வத்ஸரங்களிற்போலவே ஸாமவேதம், சுக்லயஜுஸ், யஜுர்வேதம் க்ரமாந்தம் நடைபெறும்.

நாளது பங்குனித்திங்களில் இரண்டு விசாக நக்ஷத்ரம் வருவதால் முதல் விசாகத்திலாரம்பித்துக் கடைசி விசாகம்வரை நடைபெறுகிறது.

இங்ஙனம்:

காஞ்சீபுரம், 5-2-'55

பிரதிவாதிபயங்கரம் செல்வமணி என்கிற

**ரங்கநாத தாஸன்.**

---

**Sri. Ubh. Ve. Kanchi Maha Vidvan Jagadacharya Simhasanathipathi**

# P. B. ANNANGARACHARYA SWAMI'S

## Sixty-fourth Birthday Celebration*

The sixty-fourth Birthday of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi, from 14-3-'55 to 10-4-'55 [1st Visakham to 28th Visakham of Panguni]. Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and religious lectures will also take place as usual.

You are cordially invited to attend.

Kancheepuram, 5—2—1955.

P. B. CHELLAMANI *alias*
**RANGANATHACHARYA.**

*As Sri Swami is utilising occasion like this only to encourage Vaidikas and Vidvans and for the spread of faith in our eternal religion (Sanatana Dharma), all disciples, admirers and well wishers of Sri Swami in the noble mission of his life are earnestly requested to take part in this grand festival and contribute for the successful celebration thereof.

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

# ஸப்த புண்யபுரீ வாக்யஜ்ஞும்

**(ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸங்கல்பித்து நடத்துவது.)**

“ அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா
புரீ த்வாரவதீ சேதி ஸப்தைதா மோக்ஷதாயிகா:”

என்று ப்ரஸித்தமான இந்த ச்லோகம் யாவருமறிந்ததே. “முத்தி தரும் நகரேழ்” என்று பேராசிரியரும் கூறினபடி அயோத்யை முதலான ஏழு புண்ய புரிகள் சிறந்த முக்தி க்ஷேத்ரங்களாகப் புகழ்பெற்றிருக்கின்றன. 1. அயோத்யா. 2. வடமதுரை. 3. மாயா என்கிற ஹரித்வாரம். 4. காசி. 5. காஞ்சிபுரீ. 6. உஜ்ஜயினீ. 7. த்வாரகை. இவற்றில் வாக்யஜ்ஞும் நடத்த பகவத் பாகவத நியமனத்தினால் ஸங்கல்பித்திருக்கிறது. ஸகல ஜகத்க்ஷேமமே இதற்குப் பலன். இந்தயஜ்ஞும் அக்னியைமூட்டிச் செய்வதன்று. “ஸர்வேப்யோபிச யஜ்ஞேப்யோ வாக்யஜ்ஞோ ஹி விசிஷ்யதே” என்று மஹாபாரதத்தில் சொல்லியுள்ளபடிக்கும், “வாக்யஜ்ஞேநார்ச்சிதோ தேவ: ப்ரீயதாம் மே ஜநார்தந:” என்று வைதிகர்கள் யாவரும் அநுஸந்தித்து வருகிறபடிக்கும் வாக்யஜ்ஞுமே சிறந்ததாகக் கொள்ளப்படுவதால் அதுவே நடத்தப்படும். உபயவேத பாராயணங்களும் இதிஹாஸ புராண படனங்களும் செய்விப்பதுதான் வாக்யஜ்ஞுமாவது.

யஜுர்வேதம் நாலாயிர திவ்யப்ரபந்தம் ஸ்ரீராமாயணம், ஸ்ரீபாகவதம், பகவத் கீதை, ஸ்ரீவிஷ்ணுபுராணம் இவைகளைப் பாராயணம் செய்வித்துக்கொண்டே யாத்திரை நடத்தப்படும். இந்த பாராயணத்திற்கு நன்றாகத் தேறின ஸ்வாமிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்கள். உபயவேத பாராயணத்திற்கு மாத்திரமே இங்கிருந்து ஸ்வாமிகள் அழைத்துச் செல்லப்படுவார்கள். ஸ்ரீராமாயணாதி பாராயணங்களுக்கு அதிகாரிகள் எங்கும் ஸுலபர்களாகையால் அவர்கள் ஆங்காங்கு நியமிக்கப்படுவார்கள். இந்த பாராயணங்களில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்கள் யாவரும் பேதமில்லாமல் கலந்துகொள்ளலாம். வழி முழுவதும் பாராயணமே நடக்கும்.

இதற்கான யாத்திரை ரைல்வேமார்க்கமாகவே நடைபெறும். ஆனால் ஒருவர்க்கும் சிரமமில்லாதபடிக்கு ரைல்வே கம்பெனியாரோடு ஒரு வகையான ஒப்பந்தம் செய்துகொண்டு போதுமான ஸௌகரியம் செய்து வைக்கப்படும். இந்த யாத்திரையில் அந்வயிக்கிற ஜனங்களின் ஸங்கியைக்குத் தக்கபடி வேண்டிய ரைல்வேவண்டித் தொடர்கள் நம்முடைய ஸ்வாதீனத்திலிருக்கும். அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்துகொண்டே இந்த யாத்திரை கிளம்பும்.

இந்த யாத்திரையின் காலம் 1955 ஜூன்மீ 11௳ தேதியிலிருந்து 70 நாட்கள் மாத்திரமே எதிர்பாராத சில காரணங்களினால் சில விடங்களில் தாமதிக்க நேர்ந்தால் மொத்தத்தில் 75 நாட்களுக்கு மேற்படாது.

இந்த யாத்திரையில் கலந்துகொண்டு அநுபவிக்க விருப்பமுள்ளவர்கள் தங்கள் அபேக்ஷையைத் தெரிவித்துக்கொண்டால் அவர்களைச் சேர்த்துக்கொள்வோம். அவர்கள் செலுத்தவேண்டிய தொகை விவரம் நேரில் அல்லது கடிதம் மூலமாகத் தெரிந்துகொள்வது. இந்த யாத்திரைகோஷ்டியை பக்தர்கள் அவசியம்

அநுபவிக்கவேண்டுமாதலால் குதூஹலமும் பொருள் ஸௌகரியமுமுடையவர்கள் இதில் கலந்துகொள்ளலாம்.

ஸப்தபுண்யபுரிகளில் காஞ்சீபுரியும் ஒன்றாதலால் இவ்விடத்தில் நடைபெற வேண்டிய வாக்யஜ்ஞம் இந்த யாத்திரை புறப்படுவதற்குமுன்னமே 1—4—55 to 11—4—55 நடைபெறும்.

வடநாட்டில் முக்கியமான தலம் ஒன்று விடாமல் எல்லா ஸ்தலங்களிலும் தினப்படியான பாராயணங்களோடு கூடவே இந்த யாத்திரை நடைபெறும். ஸ்ரீபதரிகாச்ரமம் தவிர மற்ற ஸகலஸ்தலங்களையும் தரிசிக்கலாகும். பாம்பே, டெல்லி, கல்கட்டா முதலான மகாநகரங்களும் காணலாகும். பதரிகாச்ரமம் ஸேவிக்க விருப்பமுள்ளவர்களுக்கு ஒரு ஸௌகரியம் செய்து கொடுக்கப்படும்; அதாவது ரிஷீகேசத்திலிருந்து அவர்கள் புறப்பட்டு பதரிசென்று ஸேவித்துத் திரும்பும்வரையில் (12 நாள்) ரிஷீகேசத்திலேயே மற்றவர்கள் தங்கியிருப்போம்.

**போஜனவசதிகள்** ;—ஓரிடத்திலும் ஒருவர்க்கும் ஒருவிதமான சிரமமுமில்லாதபடி ஸாப்பாடு ஸௌகரியம் செய்து கொடுக்கப்படும். தளிகை செய்பவர்கள் போதுமானவர்கள் கூடவே வருவார்கள். ஆதலால் ஆஹார ஸௌகரியத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவேண்டா. பாராயணம் செய்கிற ஸ்வாமிகள் தவிர இந்த யாத்திரையை சுகமாக நிர்வஹிக்கக்கூடியவர்களாய் 5 நபர்கள் கூட வருவார்கள். இவர்களுக்குமேல் யாத்திரிகர்களாக சுமார் 40 நபர்கள் வரையில் சேர்த்துக் கொள்ளலாமென்று உத்தேசம். அவர்கள், தங்களுக்குரிய வழிச்செலவுகளைத் தாங்களே பொறுத்துக்கொள்ள வேண்டும்.

பாராயணம் செய்பவர்களுக்கு ஆங்காங்கு பக்த கோடிகளால் ஸன்மானம் கிடைக்கும். வேறு வகையான சம்பளத்தை அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது. கைச்செலவில்லாமல் கிடைக்கிற க்ஷேத்ரதீர்த்த யாத்திரையையே முக்கியமான பலனாகக் கருதுமவர்களே இந்த பாராயணத்தில் அந்வயிக்கவேண்டும்.

நாம் உத்தேசிக்கிறபடி இந்த யாத்திரை சுகமாக நடைபெறுவதற்கு ஏறக்குறைய 50 ஆயிரம் ரூபாய் வேண்டியிருக்கும். "ஸப்தபுண்யபுரீவாக்யஜ்ஞப்ரவர்த்தநஸபா" என்னும் பெயரால் ஒரு கமிட்டி சென்னைமா நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் உறுப்பினர்களின் விவரம் மேலே தெரிவிக்கப்படும். ஷை மஹாஸபையின் உபஸபைகளாக அநேக ஸபைகள் பல பல விடங்களில் ஸ்தாபிக்கப்படும். அவற்றிற்கு உறுப்பினர்கள் அந்தந்தவிடங்களிலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட ஸபைகளின் மூலமாய் இப்பெரிய காரியத்திற்கு விசேஷமான பொருளுதவி நேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உபயவேதபாராயண கோஷ்டியில் சேருவதற்கு விருப்பமுள்ளவர்கள் இப்பத்திரிகையின் முடிவில் காணும் விலாசத்திற்கு நாளது பிப்ரவரி மாத முடிவுக்குள் எழுதிக்கொள்ளவேண்டியது. யாத்திரைச் செலவுகளைக் கொடுத்து இதில் கலந்து கொள்ள விருப்பமுடையவர்களும் அதே விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவேண்டியது. பதில் கடிதம் கிடைப்பதற்காக இரண்டணா ஸ்டாம்பு அல்லது முத்திரைக் கவர் வைத்தனுப்ப வேண்டியது. அவரவர்கள் தம்தம் விலாசங்களை மிகவும் ஸ்பஷ்டமாக எழுதியனுப்பவேணும். இது சம்பந்தமாய் ஸகலவிதமான அதிகாரங்களும் கமிட்டிக்குச் சேர்ந்தது.

ஷ கமிட்டியின் மெம்பர்கள்.

| | |
|---|---|
| பிரஸிடெண்ட் :— | ஸஞ்ஜீவி செட்டி & Co., கொப்பரம் வீரராகவுலு செட்டியார், மதராஸ். |
| வைஸ்பிரஸிடெண்ட்ஸ் :— | கோட. ஸ்ரீநிவாஸய்யா.<br>G. ஸ்ரீநிவாஸுலு செட்டியார்,<br>நாதெள்ள. ஸம்பத்து செட்டியார். |
| ஜாயிண்ட் ஸெக்ரிடெரிகள் :— | கராலபாடி. ராதாக்ருஷ்ணய்யா.<br>கொஞ்சேடி. ஸுப்ராயலு செட்டியார். |
| டிரஷரர் :— | மங்கலம். ராமாநுஜய்யங்கார், 61, கிடங்குவீதி, G.T. |

## ஸப்த புண்யபுரீ வாக்யஜ்ஞ யாத்திரையின் ப்ரோக்ராம்.

## 11—6—55 to 18—8—55.

**ஜூன்மீ**

| | |
|---|---|
| 11வ | மதராஸ் |
| 12 | துங்கபத்ரா |
| 13 | ஷோலாபூர் |
| 14 | பண்டரிபூர் |
| 15 | புனா |
| 16 | பாம்பே |
| 17, 18 | நாஸிக் பஞ்சவடி |
| 19 | இந்தோர் |
| 20 to 22 | உஜ்ஜயினி |
| 23, 24 | டாகோர் த்வாரகை |
| 25 | அஹமதாபாத் |
| 26 to 30 | த்வாரகைகள் |
| | ஸுதாமாபுரீ. ப்ரபாஸம் |

**ஜூலைமீ**

| | |
|---|---|
| 1வ | ஸித்தபூர் |
| 2, 3 | நாதத்வாரா |
| 4, 5 | புஷ்கரம் (ஆஜ்மீர்) |
| 6 to 10 | மதுராபிருந்தாவனம் கோகுலம் வகையறு |
| 11, 12வ | டில்லி |
| 13 | குருக்ஷேத்ரம் |
| 14 to 25 | ஹரித்வாரம் ரிஷீகேச் |
| 26 | நைமிசாரணியம் |
| 27 | கான்பூர் |
| 28 to 31 | அயோத்யா |

**ஆகஸ்டுமீ**

| | |
|---|---|
| 1வ | பிரயாகை |
| 2, 3 | சித்ரகூடம் |
| 4 to 8 | காசி |
| 9, 10 | கயா |
| 11, 12 | கல்கட்டா |
| 13, 14 | புரீ ஜகன்னாதம் |
| 15 | ஸ்ரீகூர்மம் |
| 16 | ஸிம்மாசலம் |
| 17 | நெல்லூர் |
| 18 | மதராஸ் |

ஜூன் 11வ யாத்திரை புறப்பட முடியாவிட்டால் அந்த தேதிக்கு ஸமீபத்தில் ஸௌகரியமானநாளில் புறப்படலாம். என்றைக்கு புறப்பட்டாலும் யாத்திரையின் நாள் 70க்குமேல் இல்லை.

தபால் கரஸ்பாண்டென்ஸுகள் நடத்துவதற்கு விலாஸம்:

(1) V. R. எதிராஜுலு செட்டி, 7, கருப்பண்ணன் தெரு, மதராஸ்-1.
(2) P. E. ஸ்ரீநிவாஸுலு நாயுடு, 17, திருப்பள்ளி தெரு, G. T.

இப்படிக்கு:
P. B. அண்ணங்கராசாரியர்,
25—1—55.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) சென்னை-1.